பக்கங்கள் : பதின்னான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 18 வியாழக்கிழமை (03.08.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 248

# மூதூர் புலிகள் வசம்

# சமர் தொடர்கின்றது!


## படையினரின் பல மினி முகாம்கள் தொடர் வரிசையில் வீழ்ச்சியுற்றன

திருகோணமலை, ஓகஸ்ட் 3

திருகோணமலை மாவட்டத்தில் தமது கட்டுப்பாட்டிலுள்ள சம்பூர் பகுதியிலிருந்து நேற்று அதிகாலை திடீரென அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்த புலிகள், அங்கு பல இடங்களைத் தங்களது ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்திருக்கின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை அரசுப் படைகளின் கட்டுப்பாட்டிலிருந்த மூதூர் நகரில் நேற்றுத் தாராளமாகப் புலிகளின் போராளிகள் நடமாடித் திரிவதைக் காணக்கூடியதாக இருந்தது. கட்டைப்பறிச்சான், பச்சனூர், தோப்பூர், பாலத்தோப்பு, கிளிவெட்டி என அங்கு வரிசையாக இருந்த படை முகாம்கள் புலிகளின் தாக்குதலில் சரிந்தன.

(14ஆம் பக்கம் பார்க்க)




## மூதூர் நகரப் பகுதியிலிருந்து புலிகளை விரட்டுவோம் என்கிறார் ரம்புக்வெல!



மூதூர், ஓக.3

மூதூர் நகரிலிருந்து விடுதலைப் புலிகளை இன்று (புதன்கிழமை) மாலைக்குள் விரட்டியே தீருவோம் என்று நேற்று முற்பகல் ஆவேசத்துடன் கூறினார் பாதுகாப்பு தொடர்பான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

மூதூர் நகரின் சில முக்கிய பகுதிகளையும், மூதூர் இறங்குதுறையையும் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருந்தனர். இது தொடர்பாக நேற்று முற்பகல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் தொடர்புகொண்டு கேட்டோம். மூதூர் நகரைப் புலிகள் கைப்பற்றியிருக்கிறார்கள் என்பதை நேரடியாக அவர் ஒப்புக்கொள்ளவில்லை. எனினும், ''அங்கிருந்து (மூதூரிலிருந்து) புலிகளை இன்று (அதாவது புதன்கிழமை) மாலைக்குள் விரட்டியடிப்போம்'' - என்றார் ரம்புக்வெல.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் மோதலில் சிக்கி 4 முஸ்லிம்கள் மரணம்

### 35 பேர் வரை காயம்

கொழும்பு, ஓக.3

மூதூர் மற்றும் தோப்பூர் பகுதிகளில் நேற்று அரசுப்படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் வெடித்த பெருஞ்சமரின் இடையில் சிக்கி குறைந்தது நான்கு முஸ்லிம்கள் உயிரிழந்திருக்கிறார்கள். 35 இற்கும் அதிகமானோர் காயமடைந்திருக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் கடும் ஷெல், விமானத் தாக்குதல்கள் நேற்று இடம்பெற்றன.

ஷெல் தாக்குதல்களினாலேயே பொதுமக்களுக்குப் பெரும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் படையினர் மீது மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அப்பாவி மக்களைப் பாதுகாக்கும் தற்காப்புத் தாக்குதல்களே!

### பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் செயற்பாடு அல்ல எனப் புலிகள் விளக்கம்

கிளிநொச்சி, ஓக.3

கிழக்கில் ஸ்ரீலங்கா படைமுகாம்கள் மீதும் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் உட்பட தற்சமயம் நடத்தப்பட்டு வரும் நடவடிக்கைகள் அனைத்தும் அப்பாவித் தமிழ்ப் பொது மக்களைப் பாதுகாப்பதற்கான தற்காப்புத் தாக்குதல் நடவடிக்கைகளே. பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் நோக்கம் கொண்ட படை நடவடிக்கைகள் அல்ல.

- இப்படி விளக்கமளித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன்.

அப்பாவித் தமிழ் மக்கள் வசிக்கும் பிரதேசங்கள் மீது ஸ்ரீலங்கா படைத் தளங்களில் இருந்தும், ஆகாய மார்க்கமாகவும் நடத்தப்பட்டுவரும் கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காகவே புலிகள் தற்போது நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். மிக அவசரமான மனிதாபிமானத் தேவை கருதியே தற்காப்புத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன - என்றும் இளந்திரையன் தெரிவித்திருக்கிறார்.



தமிழ் மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது ஆட்லறித் தாக்குதல்களை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் ஆட்லறித் தளங்கள் அமைந்துள்ள படை முகாம்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மோதலை உடனடியாக நிறுத்துமாறு சொல்ஹெய்ம் இருதரப்புகளிடமும் கோரிக்கை

### விசேட தூதுவர் போவர் இன்று வருகின்றார்



நோர்வே, ஓக.3

இலங்கையில் இருதரப்பும் - அரசும், விடுதலைப் புலிகளும் மோதலை நிறுத்தவேண்டும் என்று இலங்கைக்கான நோர்வேயின் அமைதித் தூதுவரும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வாறு நோர்வே வெளிவிவகார அமைச்சு நேற்றிரவு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியிலிருந்து நீர் விநியோகம் தடுக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த சில நாள்களாக யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள இரு தரப்பினரும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



தற்போதைய நிலைமையானது இனப்பிரச்சினை விடயத்தில் இராணுவ மோதலை உருவாக்கக் கூடும். இந்த நடவடிக்கைகள் 2002ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவதாகும்.

''இரு தரப்பினரும் தற்போதைய போர் நடவடிக்கைகளைக் கைவிட்டு பேச்சுகளுக்குத் திரும்பவேண்டும். பொது மக்கள் பாதிக்காத வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் நீர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நாவலர் வீதியில் நேற்று இளைஞர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஓக 3

யாழ்.நாவலர் வீதியில் பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

யாழ்.மணிக்கூண்டு வீதியைச் சேர்ந்த பத்மநாதன் பீஸ்மானந்தன் (வயது 29) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகம் சந்தியில் படையினர் மீது வேட்டு!

யாழ்ப்பாணம், ஓக 3

சுன்னாகம் சந்தியில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்று பிற்பகல் 1 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அதைத் தொடர்ந்து பத்து நிமிடங்கள் படையினர் வேட்டுகளைத் தீர்த்தனர். இதனால் அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டது. கடைகள் பூட்டப்பட்டு சனநடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தாக்குதலை நிறுத்திவிட்டு பேசவருக! புலிகளை அழைக்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஓக.3

''தமிழீழ விடுதலைப்புலிகள் திருகோணமலையில் மேற்கொண்டுவரும் மிலேச்சத்தனமான தாக்குதல்கள் மூலம் அவர்கள் தமது நோக்கை அடைந்துவிட முடியாது. தாக்குதல் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி புலிகள் பேச்சு மேசைக்குத் திரும்பவேண்டும்''

''இந்தத் தருணத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் துரோகத்தன்மையுடன் செயற்படுவதை ஐக்கிய தேசியக் கட்சி உடனடியாக நிறுத்தி அரசு மேற்கொள்ளும் அமைதி முயற்சிக்கு முழு ஆதரவையும் வழங்கவேண்டும்.''

- இவ்வாறு தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் சி.பீ. ரட்னாயக்க நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோது கூறினார். இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்,

திருகோணமலையில் இப்போது இடம்பெற்று வரும் யுத்தம் போன்ற நிலைமை மிகவும் கவலையைத் தருகின்றது. அரசு பேச்சு மூலம் பிரச்சினையைத் தீர்த்து சமாதானத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவரும் இத்தருணத்தில் இவ்வாறான நிலை தோன்றியிருப்பது மக்களை அச்சத்திற்குள்ளாக்கியுள்ளது.

ஏழை விவசாயிகளுக்கான நீரை மறித்து புலிகள் தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்திருப்பதானது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல. பிரச்சினைகள் பேச்சு மூலமே தீர்க்கப்படவேண்டும். ஆகவே, புலிகள் தாக்குதலை நிறுத்திப் பேச்சுக்குத் திரும்பவேண்டும்.

அதேபோல் இந்த அபாயகரமான நிலையை ஐக்கிய தேசியக் கட்சி சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான துரோக நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இந்த நாட்டைப் பற்றி நினைக்காமல் - இந்த நாட்டில் சமாதானம் மலர வேண்டும் என விரும்பாமல் - நயவஞ்சகத்துடன் அது செயற்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமாதானத்தை உருவாக்கியே தீரவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளார். அதற்காக அனைத்துக் கட்சிகளின் ஆலோசனைகளையும் பெறுவதற்கான சர்வகட்சி மாநாடுகளை நடத்தி வருகின்றார்.

பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சி நாம் மேற்கொண்டு வரும் அமைதி முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கவேண்டும். ஆனால், அக்கட்சியோ சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ள முடியாது என்றும், அமைதி முயற்சிக்கு ஆதரவு வழங்க முடியாது என்றும் கூறிக்கொண்டு எமது நட வடிக்கைகளை மோசமாக விமர்சித்து வருகின்றது.

சமாதானம் தொடர்பான திம்புப் பேச்சு முதல் அத்தனை பேச்சுகளையும் குழப்பியடித்தது ஐக்கிய தேசியக் கட்சிதான். இப்போதும் அக்கட்சி அவ்வாறான நிலைப்பாட்டில் தான் உள்ளது. நாட்டிற்குத் துரோகம் செய்ய எத்தனிக்கின்றது.

இந்த நாட்டு மக்கள் அனைவரும் இன, மத பேதங்களுக்கப்பால் ஒன்றுபட்டு சமாதான முயற்சிக்கு முழு ஆதரவையும் வழங்கவேண்டும். அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியும் ஏனைய கட்சிகளும் எம்முடன் இந்த விடயத்தில் ஒன்றிணைய வேண்டும் - என்றார்.(க)

## கொக்குவிலில் வான் கடத்தல்

யாழ்ப்பாணம்,ஓக.3

கொக்குவில் பகுதியில் 'ஹைஏஸ்' வாகனம் ஒன்று நேற்றுமுன்தினம் மாலை ஆயுத முனையில் கடத்தப்பட்டது.

கொக்குவில் அம்மன் வீதியில் நேற்று முன்தினம் மாலை 7.15 மணியளவில் வைத்து இந்த வாகனம் கடத்தப்பட்டுள்ளது.

கறுப்புத் துணியால் முகங்களை மறைத்துக் கட்டிக்கொண்டு ஆயுதங்களுடன் வழிமறித்த குழு ஒன்று வாகனத்தில் பயணம் செய்த பெண் உட்பட இரு சிறுவர்களையும் நடு வீதியில் இறக்கிவிட்டு வாகனத்தைக் கடத்திச்சென்றது எனக் கூறப்பட்டது.

சம்பவம் தொடர்பாக பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (1-204)

## புத்தர் சிலைகளின் கண்களிலிருந்து சிவப்பு, நீல நிறங்களில் ஒளிக் கீற்று?

### கொழும்பிலும், பிற இடங்களிலும் நேற்று

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் வேறு சில மாவட்டங்களிலும் உள்ள விகாரைகளின் புத்தர் சிலைகளின் கண்களில் இருந்து நேற்றுத் திடீரென ஒரு வித ஒளி வீசியதாம். இதனைக் கேள்வியுற்ற மக்கள் அதைப் பார்ப்பதற்காக விகாரைகளில் அலை மோதினர். இதனால், கொழும்பு நகரில் சில இடங்களில் நீண்ட நேரமாக வாகன நெரிசல் ஏற்பட்டது. கொழும்பு மத்தி, வத்தளை, இராஜகிரிய உள்ளிட்ட பல இடங்களில் அமைந்துள்ள புத்தர் சிலைகளின் கண்களில் இருந்து சிவப்பு மற்றும் நீல நிற ஒளிக் கீற்று மாறி மாறி வீசுவதாக நேற்றுக் கதை பரவியது.

இதனையடுத்து, காலையிலிருந்து பல மணி நேரமாக மக்கள் வீதியோரங்களில் அமைந்துள்ள புத்தர் சிலைகளின் முன்பாக நின்று கொண்டு பார்க்கத் தொடங்கினர்.

இதனால், காலையிலிருந்தே கொழும்பு நகரிலும், புறநகரங்களிலும் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது. பாடசாலை செல்லும் மாணவர்களும், வேலைக்குச் செல்வோரும் பெரும் அவதிப்பட்டனர்.

கொழும்பு நகரில் மாத்திரமின்றி காலி மற்றும் மாத்தறை போன்ற இடங்களிலும் இவ்வாறு புத்தர் சிலைகளின் கண்களில் ஒளி வீசியதாகவும், அதைப் பார்க்க அங்கும் மக்கள் திரண்டிருந்தனர் என்றும் அங்கிருந்து எமது மாவட்ட., பிரதேச செய்தியாளர்கள் அறிவித்தனர். (க)



நேற்று மதியம் நாவலர் வீதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியான பத்மநாதன் பீஸ்மனந்தன் என்பவரது சடலத்தினை யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (படம்:- நேசன்,தமிழினியன்)

## கரும்புலிகள் இருவர் உட்பட ஏழு கடற்புலிகள் வீரச்சாவு

### விடுதலைப் புலிகள் அறிவிப்பு

திருகோணமலைத் துறைமுகக் கடற்பரப்பு மற்றும் புல்மோட்டை - கொக்கிளாய் கடற்பரப்பில் இடம்பெற்ற கடற்சமர்களில் இரு கடற் கரும்புலிகள் உட்பட ஏழு கடற்புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''திருகோணமலைக்குப் படையினரை ஏற்றிக்கொண்டு பிற்பகல் 2.25 மணியளவில் வந்த ஸ்ரீலங்கா கடற்படையினரின் தொடரணிக்கும், விடுதலைப் புலிகளின் கடற்புலிகளுக்கும் இடையில் கடற் சமர் ஒன்று திருமலை உட்துறைமுகப் பகுதியில் நடைபெற்றது.

மாலை 5 மணி வரை நடைபெற்ற இச்சமரின் போது ஸ்ரீலங்கா கடற்படையினருக்கு ஆதரவாக ஸ்ரீலங்கா விமானப்படையும், பீரங் கிப் படையணியும் தாக்குதல்களை நடத்தின.

இத்தாக்குதலின்போது ஸ்ரீலங்கா கடற்படையினரது 'டோறா' படகு மூழ்கடிக்கப்பட்டது. மேலும் இரு டோறாப் படகுகள் சேதத்துக்குள்ளாகின. திருகோணமலையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா கடற்படையின் பிராந்தியத் தலைமையகமும் கடுமையாகச் சேதமடைந்துள்ளது.

இச்சமரில் இரண்டு கடற்கரும்புலிகள் உட்பட ஆறு கடற்புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

இதன் பின்னர் மாலை 6.00 மணியளவில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் டோறா அணி ஒன்றுக்கும், கடற்புலிகளுக்கும் இடையில் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், புல்மோட்டை கடற்பரப்பில் சமர் ஒன்று நடந்துள்ளது.

இரவு 9.00 மணி வரை நடைபெற்ற இம்மோதலின்போது ஸ்ரீலங்கா கடற்படையினருக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றித் தெரிய வரவில்லை. இம்மோதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். இந்தக் கடற்சமர்களில் கடற்புலிகளுக்கு ஆதரவாக விடுதலைப் புலிகளின் பீரங்கிப் படையணி தாக்குதல்களில் ஈடுபட்டது.''

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## ஹாட்லி மாணவர் இன்று வகுப்புப் பகிஷ்கரிப்பு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் இன்று வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர் என கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

கல்லூரியில் உயர்தர வகுப்பு மாணவனான ஜெகதீஸ்வரன் கஜேந்திரன் (வயது- 18) என்பவர் அண்மையில் காணாமற் போயிருந்தார். அதனைக் கண்டித்தே இன்று வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (எ-1-ரி)

## பண்டத்தரிப்பில் உற்பத்தியான தேன்முறுக்கில் தடைசெய்யப்பட்ட இரசாயனப் பொருள் கலப்பு

### கொழும்பில் நடந்த ஆய்வில் கண்டுபிடிப்பு; நல்லூர் சூழலிலும் அது விற்பனையாம்!

யாழ்ப்பாணம், ஓக.3

பண்டத்தரிப்பில் தயாரிக்கப்பட்ட தேன் முறுக்கு தடைசெய்யப்பட்ட இரசாயனப் பொருள் கலந்து தயாரிக்கப்பட்டுள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிமன்றத்தில் இந்த விடயம் குறித்து வழக்கு ஒன்று சுகாதாரப் பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பண்டத்தரிப்பில் இயங்கும் நிறுவனம் ஒன்று பெரும் அளவில் தயாரித்த தேன்முறுக்கின் மாதிரியை கொழும்பில் உள்ள ஆய்வு நிறுவனத்திற்கு சுகாதாரப் பகுதியினர் அனுப்பி வைத்தனர் என்றும் -

உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய - தடை செய்யப்பட்ட இரசாயனப் பொருள் அந்த முறுக்கில் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது என்றும் - சுகாதாரப் பரிசோதகர் மல்லாகம் நீதிவான் திருமதி.ச.இளங்கோவனுக்குசமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடர உத்தரவிட்ட நீதிவான், இத்தகைய தேன் முறுக்கை குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டாம் என்று பெற்றோரை அறிவுறுத்தியுள்ளார்.

பிரஸ்தாப நிறுவனம் தயாரித்த பெரும் தொகையான தேன்முறுக்கு நல்லூர் ஆலயச் சூழலில் தற்போது விற்பனைக்கு வந்துள்ளது எனக் கூறப்பட்டது. (எ-1)



தீ விபத்தினால் சேதமடைந்த யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள 'ஸ்கை எலக்ரோனிக்ஸ் சிஸ்ரம்' நிறுவனத்திற்கு வரையறுக்கப்பட்ட செலிங்கோ பொதுக் காப்புறுதி நிறுவனம் 30 இலட்சம் ரூபாவை தீ அபாயக் காப்புறுதியாக வழங்கியது. இது தொடர்பான வைபவம் நேற்று செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

'ஸ்கை எலக்ரோனிக்ஸ் சிஸ்ரம்' நிறுவனத்தின் உரிமையாளர்களான எஸ்.சற்குணராஜா, ஜே.மதியாளன் ஆகியோர் பிரசன்னமாகியிருக்க இந்தக் காசோலை வழங்கப்பட்டது. செலிங்கோ பொதுக் காப்புறுதி நிறுவனத்தின் யாழ். மாவட்ட முகாமையாளர் எஸ். தவசீலன், நிறுவனத்தின் உரிமையாளர்களில் ஒருவரிடம் காசோலையைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

அருகில் ...ான்ஸ் நிறுவனத்தின் முகாமையாளர் எஸ்.ரகுநாதன், செலான் வங்கி ...கிளை முகாமையாளர் எஸ்.ஞானபண்டிதர், செலிங்கோ ஆயுள்காப்புறுதி நிறுவனத்தின் யாழ். முகாமையாளர் என்.நந்திக்குமார் ஆகியோரும் உள்ளனர். (8)

## பலாலி படைத்தலைமையகத்தின் அறிவித்தல்

ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் தொடர்பான தகவல்களை அறியத் தருவோருக்கு பணப்பரிசில் வழங்கப்படவுள்ளது என்று பலாலியில் உள்ள பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று பத்திரிகைகளுக்குச் செய்திக்குறிப்பு ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்தச் செய்திக்குறிப்பில் :-

யாழ். குடாநாட்டில் மாணவர்களையும் பொதுமக்களையும் மட்டுமல்லாது படையினரையும் இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்படுகின்றது. இதன்மூலம் இப்பகுதியில் யுத்த நிலையை ஏற்படுத்தும் அழிவுகார இயக்கங்களின் செயல்களை கண்டு தொடர்ந்தும் நீங்கள் அமைதியாக இருக்கத் தேவையில்லை.

பொதுமக்கள் வழங்கும் சரியான தகவல்கள் மூலம் நீங்கள் வசிக்கும் பிரதேச மக்கள் பாதுகாக்கப்படுவர். அதேபோல் பணப்பரிசில் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பையும் படையினர் ஏற்படுத்தியுள்ளனர். இவ்வாறு தகவல் தருபவர்களின் விபரங்கள் எவையும் வெளிவிடப்படமாட்டாது. தகவல்கள் இரகசியமான முறையில் பாதுகாக்கப்படும்.

(13ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# மேலாதிக்கச் சிந்தனையினால் எழுந்துள்ள கருத்தியல் போக்கு

இலங்கைத் தீவு ஒரு விசித்திரமான நாடு. மணலைக் கயிறாகத் திரித்து அரசியல்வாதிகள் கொடுக்க, அந்தக் கயிற்றை அப்படியே விழுங்கும் மக்கள் இந்தத் தீவில்தான் அதிகம் உள்ளனர்.

'சமாதானத்துக்கான யுத்தம்', 'மனிதாபிமானத் தேவைகளை நிறைவு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை' - என்றெல்லாம் காலத்துக்குக் காலம் அரசியல் தலைமைகளும், படைத் தலைமைகளும் கொடுக்கும் கயிறு இந்த மக்களிடம்தான் அதிகம் செல்லுபடியாகின்றது; அதிகம் அவிகின்றது.

1995 இல் இலங்கை அரசு - புலிகள் பேச்சு முறிந்தபோது, 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற விநோதமான - விந்தையான - விபரீதமான கருத்தியல் வித்தை - அது கருத்தியல் விந்தையும் கூட - அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் முன்வைக்கப் பட்டது.

''அமைதி வழியில் நிரந்தரமான - நிலையான - சமாதானத்தை எட்டுவதாயின் 'சமாதான விரோதிகளை' நசுக்கிவிட வேண்டும். புலிகள் இயக்கத்தினரே சமாதான வழிமுறைகளுக்கும், அமைதி வழியிலான அரசில் தீர்வுக்கும் முட்டுக்கட்டையாக் இருக்கின்றார்கள். ஆகவே, நிலையான சமாதானத்தை நிறுவி, தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டும் என்றால் ஒரு பாரிய யுத்தம் மூலம் புலிகள் இயக்கம் பூண்டோடு - கூண்டோடு - அழிக்கப்பட வேண்டும்'' - என்ற பரப்புரையை முன்வைத் தார் அப்போதைய அதிபர் சந்திரிகா குமாரதுங்க.

'அமைதி', 'சமாதானம்' என்ற உன்னத இலட்சியங்களை அடைவதற்காகப் போர் என்ற அழிவு நடவடிக்கை அவசியமாகின்றது என்ற சந்திரிகாவின் விபரீதமான கோட்பாட்டை இலங்கைத் தீவின் - குறிப்பாகத் தென்னிலங்கையின் - மக்கள் நம்பி ஏற்றுக் கொண்டார்கள். அதனால், ஏமாந்தும் போனார்கள்.

இறுதியில் இந்த விசித்திரமான கொள்ளைக் கோட்பாட்டுக்கான பரிசை - விளைவை - விலையை - இந்தச் சிறு தீவின் மக்கள் பேரிழப்பாகச் செலுத்த வேண்டியவர்களானார்கள். அதுவே, கடந்த தசாப்த காலத்தில் இந்த நாட்டின் அனுபவப் பாடமாக - பட்டறிவாக - அமைந்தது.

பௌத்த - சிங்கள மேலாதிக்க சிந்தனை காரணமாகவும், ஈழத் தமிழர்களுக்கு நியாயமான உரிமைகளை வழங்க மறுக்கும் பேரினவாதக் கருத்தியல்பு காரணமாகவும் நீதியான தீர்வுக்கு வர மறுக்கும் தென்னிலங்கை ஆட்சி அதிகாரத்தின் அடி மனதில் தமிழர்களை அடக்கியாளும் இராணுவப் பொறித் திட்டமே பொதிந்து கிடக்கின்றது.

அதுவே அன்று 'சமாதானத்திற்கான போர்' என்ற வெளிப் பூச்சுச் சாயத்துடன் வெளிப்பட்டு, இறுதியில் வாங்கிக் கட்டிக் கொண்டது. அதனால், குப்பைக் கூடைக்குள் அந்தக் கருத்தியல் கோட்பாடு தூக்கி வீசப்படவும் வேண்டியதாயிற்று.

அத்தகைய கொள்கை நிலைப்பாட்டிலிருந்து இன்றைய ஆட்சி அதிகாரமும் கூட, வேறுபடவே இல்லை என்பது அப்பட்டமாக இப்போது வெளிப்படுகின்றது.

அரசுத் தலைமையினதும், படைத் தலைமையினதும் கருத்து வெளிப்பாடுகள் அதனையே எமக்கு உணர்த்துகின்றன.

இராணுவத் தலைமையக வாசலில் நடந்த அனர்த்தத்தில் தப்பிப் பிழைத்து, மருத்துவ விடுப்பை முடித்துக் கொண்டு பதவிக்கு மீண்ட இராணுவத் தளபதி, மீண்டு வந்த கையோடு '' விடுதலைப் புலிகள் இயக்கம் ஆக ஏழாயிரம் பேர் கொண்ட ஒரு பயங்கரவாத இயக்கம்தான்!'' - என்று எள்ளி நகையாட, மாவிலாறு தண்ணீர்ப் பிரச்சினையும் கூட அதே பாணியில் அரசுத் தரப்பால் அணுகப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்கள் மாவிலாறு தண்ணீர் விநியோகத்தைத் தடுத்தார்கள் என்றால் அதற்குப் பின்னால் அவர்கள் எதிர்நோக்கும் அன்றாட - அத்தியாவசிய - மனித நேயப் பிரச்சினைகள் வலிமையாக உள்ளன. அதேபோல, தண்ணீர் விநியோகம் தடுக்கப்பட்டதால் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சேருவில பகுதியில் உள்ள மக்களும் பல்வேறு மனிதாபிமான நெருக் கடிகளை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது என்பதும் உண்மைதான்.

இரு தரப்பு மக்களினதும் அவசர - அவசிய - மனிதாபிமானப் பிரச்சினையை உரிய வழியில் தீர்ப்பதற்கு நியாயமான வழிமுறைகள் உள்ளன. பேசித் தீர்க்கப்படக் கூடிய விவகாரமே இது. சுமுகமாகக் கலந்து பேசி, இணக்கப்பாடு காணவேண்டிய இந்த விடயத்தை 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற பாணியில் கையாண்டதன் விளைவை எதிர்கொண்டு தடுமாறுகிறது அரசுத் தலைமை.

'பிச்சை வேண்டாம்; நாயைப் பிடி!' - என்ற இக்கட்டு இப்போது. வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக் கொண்டமை போல நிலைமை.

பேசித் தீர்க்க வேண்டிய மனிதாபிமானப் பிரச்சினையை, அப்படிச் செய்வதை விடுத்து, 'மனிதாபிமானத் தேவைகளை நிறைவு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை' என்ற பெயரில் பலாத்காரத்தைப் பிரயோகத்துக் கையாண்டதன் மூலம், 'குளவிக் கூட்டைக் கல்லெறிந்து குழப்பிய' கதையாகக் கெடுத்து விட்டு அதன் விளைவை வாங்கிக் கட்டிக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது அரசுத் தரப்பு.

மாவிலாறு நகர்வின் பெறுபேறு மூதூர் வரை விரிந்து விட்டது. அது இலங்கை முழுவதும் பரவுவதற்கு இன்னும் எவ்வளவு காலமாகும் என்பதே இன்று மக்கள் மனதைப் பதைபதைக்க வைக்கும் கேள்வியாகும்.

இவ்வாறு நிலைமை மோசமடைவதற்கு அடிப்படைக் காரணம் தென்னிலங்கையில் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் தலைமைகளின் மேலாதிக்கச் சிந்தனைப் போக்குத் தான்.

அதிலிருந்து அவை வெளியே வந்து, தமிழர் தரப்பை சம நிலை யில் பேணி, சமரசம் செய்யத் தயாராகாத வரை சுமுகத் தீர்வு சாத்தியமேயில்லை.

# அமைச்சர் பேரியல் மகன் திருமணத்தின்போது அதிகாரத் துஷ்பிரயோகமெனக் குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.3

தனது மகனின் திருமண வைபவத்துக்காக அமைச்சர் பேரியல் அஷ்ரப் அதிகாரத் துஷ்பிரயோகம் செய்தார் என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் மகனுக்கு கடந்த மாதம் 14ஆம் திகதி திருமணம் நடைபெற்றது.

இதன்போது வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களின் சார்பில் திருமணப் பரிசுகளாக பெறுமதிமிக்க பொருள்கள் வழங்கப்பட்டன எனத் தெரிய வந்துள்ளது.

இந்த வகையில் வீடமைப்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் 25 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுள்ள காரொன்றை அன்பளிப்புச் செய்துள்ளதாக அறியவந்துள்ளது. அதுமட்டுமன்றி மணமக்கள் வசிக்கவுள்ள வீட்டுக்கு குளிர்சாதன வசதியை தேசிய வீடமைப்பு அதிகார சபை 80 ஆயிரம் ரூபாவை செலவிட்டு ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இவை மட்டுமன்றி மேற்படி திருமண நிகழ்வை வீடியோப் படம் பிடிப்பதற்காகவும் புகைப்படங்கள் எடுப்பதற்காகவும் ஊடகப் பிரிவொன்றுக்கு எழுத்துமூல உத்தரவொன்று வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனிடையே தனது மகனின் திருமண நிகழ்வுக்காக அரச நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டை அமைச்சர் பேரியல் அஷ்ரப் மறுத்துள்ளார். (205)

# இலவச மாணவர் பருவகாலச் சீட்டு விநியோகிக்கும் காலம் நீடிப்பு

குடாநாட்டு மாணவர்களுக்கான இலவச பருவகாலச் சீட்டு விநியோகம் இம்மாதம் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இத் தகவலை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய செயலாற்று முகாமையாளர் செ.கமலநாதன் தெரிவித்தார்.

பாடசாலை செல்லும் மாணவர்கள் அரச பஸ்களில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். நெருக்கடிகளைத் தவிர்க்கவும், இச் சலுகை தவறாகப் பயன்படுத்தப்படாமல் இருக்கவும் மாணவர்களுக்கு பாடசாலைகள் ஊடாக இலவசப் பருவகாலச் சீட்டு வழங்கப்படுகிறது.

குடாநாட்டுப் பாடசாலைகளின் அதிபர்கள் தமது மாணவர்களுக்கான இலவச பருவகாலச் சீட்டுகளை சபையின் பணிச்சாலைகளில் எதிர்வரும் 31ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம் என்று வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் செயலாற்று முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் தொடக்கம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையான மாணவர் பருவகாலச் சீட்டுகள் பாடசாலை அதிபர்களிடம் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் -

எனவே, சகல பாடசாலை அதிபர்களும் அருகாமையிலுள்ள பணிச்சாலைகளில் பருவகாலச் சீட்டுகளைப் பெற்று மாணவர்களுக்கு வழங்குமாறும் - அவர் மேலும் தெரிவித்தார். (202)

# இந்து விடுதியில் முறையிடலாம்

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தில் கண்டெடுத்த பொருள்கள் ஒப்படைத்தல் காணாமற்போதல், திருட்டுகள், கலாசார சீர்கேடுகள் போன்றவை தொடர்பான உடனடி முறைப்பாடுகளை செய்தல் ஆகியவற்றை நல்லூர் இந்து விடுதியில் செயற்படும் விசேட செயலணி அலுவலகத்தில் மேற்கொள்ளலாம் என்று மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். (13)

## யாழ்.ஆஸ்பத்திரி பிரேத அறையில்

# உறவினர்களின் வருகைக்காக காத்திருக்கும் சடலங்கள்!

யாழ்ப்பாணம்,ஓக.3

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் வேளையில் உயிரிழந்த மூன்று பேரின் சடலங்கள் உறவினரின் வருகைக்காக நீண்டநாள்களாக வைத்தியசாலையின் பிரேத அறையில் தவம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட உடுப்பிட்டி, மார்க்கட் லேனைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை ராகவப்பிள்ளை (வயது 80) என்ற வயோதிபர் கடந்த மே மாதம் 4ஆம் திகதி மரணமானார்.

இதேபோல் கடந்த ஜூன் மாதம் 11ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மூன்று நாள்களின் பின்னர் 14ஆம் திகதி வவுனியா கந்தசாமி கோயிலடியைச் சேர்ந்த இராசவதம் வரதராசா (வயது 68) என்பவர் உயிரிழந் தார்.

இதற்கிடையில் - கடந்த ஜூலை மாதம் 27ஆம் திகதி அனுமதிக்கப்பட்டு நான்கு நாள்களின் பின்னர் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சின்னையா நடராசா (வயது 58) என்பவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் கடந்த மாதம் ஜூலை 31ஆம் திகதி உயிரிழந்தார்.

வைத்தியசாலை பிரேத அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள இந்த மூவரின் சடலங்களையும் அவரவர் உறவினர்கள் வந்து பொறுப்பேற்குமாறு வைத்தியசாலை நிர்வாகமும் வைத்தியசாலை பொலிஸ் பிரிவும் கோரிக்கை விடுத்துள்ளன. (எ-15)

# புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத் தடைக்கு அரசின் கொள்கை சரியென அர்த்தமாகாது!

## இப்படிக் கூறுகிறார் ஆனந்தசங்கரி

கொழும்பு,ஓக.3

விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையானது இனப்பிரச்சினையில் அரசு சரியான கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாக அர்த்தமாகாது.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கூறியுள்ளார் என்று 'ராவய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தவறான செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாகக் கருதியே ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீதான தடை விதிப்பை நடைமுறைப்படுத்தியது. நாட்டின் வடக்கு - கிழக்குப் பிரச்சினையில் சரியான கொள்கைகளை இலங்கை அரசு கடைப்பிடிக்கிறது என்பதற்காக புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் விதித்துவிடவில்லை.

இந்நிலையில் அரசு தமிழ் மக்களுக்கு நியாயமான உடனடித் தீர்வொன்றை வழங்கத் தவறுமானால் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை சர்வதேச ரீதியில் நியாயப்படுத்துவதாக அமைந்துவிடும்.

அரச பிரதிநிதிகள், விசேட ஆலோசனைச் சபை என்பவற்றினூடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிப்பதாகக் கூறிக்கொண்டு அரசு காலத்தைக் கடத்தக்கூடாது. இதனால் ஏமாற்றமடையப் போவது அரசேயன்றி விடுதலைப் புலிகள் அல்லர்.

- இவ்வாறு ஆனந்தசங்கரி கூறியுள்ளார் என்று செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (205)

# சூரிய வெப்பத்தின் தாக்கத்தால் ஆண்டுக்கு 60 ஆயிரம் பேர் பலி!

கொழும்பு,ஓக.3

அதிகரித்துவரும் சூரிய வெப்பத்தின் தாக்கம் காரணமாக உலகில் ஆண்டொன்றுக்கு 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர். உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

விரைவாகப் பரவும் 'மெலனோமாஸ்' என்ற நோயினால் பீடிக்கப்பட்டு ஆண்டுக்கு 48 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என்றும் -

சுமார் 12 ஆயிரம் பேர் பல்வேறு விதமான சருமப் புற்றுநோய்களினால் தாக்குண்டு உயிரிழக்கின்றனர் என்றும் -

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சருமப் புற்றுநோய்களில் நூற்றுக்குத் தொன்னூறு சதவீதமானவை சூரிய ஒளியின் புற ஊதாக்கதிர் வீச்சின் தாக்கம் காரணமாகவே ஏற்படுகின்றன எனவும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சூரியக் கதிர்கள் படுவதால் எத்தகைய நோய்கள் தாக்குமென இந்த அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது. இதன்படி சூரியக் கதிர்களின் தாக்கம் காரணமாக சருமம் வெந்து புண்ணாவது, சருமத்தில் சுருக்கம் விழுவது, கண்களில் வெள்ளை படர்தல், டெரிஜியம் எனப்படும் கண்களில் தசை வளரும் நோய் மற்றும் புண்கள் உள்ளிட்ட வேறுசில சருமப் பாதிப்புகள் ஏற்படக் கூடும்.

சூரிய ஒளி அளவுக்கு அதிகமாக எம் மீது படுவதால் அபாயத்தை விளைவிக்கக் கூடும் என்று உலக சுகாதார அமைப்பின் சூழல் செயற்பாடுகள் தொடர்பான பணிப்பாளர் கலாநிதி மாரியா நெய்ரா தெரிவித்துள்ளார். (206)

# சனசமூக நிலையங்களின் விவரம் சேகரிப்பு

வலி.தென்மேற்கு, ஓக.3

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் விவரங்களைத் திரட்டும் நடவடிக்கையை சபையின் தலைமை அலுவலகம் மேற்கொண்டு வருகிறது.

சனசமூக நிலையங்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ள வசதியாக விவரங்கள் திரட்டப்படுகின்றன.

இதன்னால், சனசமூக நிலையங்களின் பெயர், பதிவு இலக்கம், முகவரி, வங்கிக் கணக்கு இலக்கம், தொடர்பு கொள்ளும் தொலைபேசி இலக்கம், நிர்வாகிகளின் விவரங்கள் ஆகியவை உள்ளடக்கிய தகவல்களை சபைக்கு வழங்க வேண்டும் என சபையின் செயலாளர் கேட்டுள்ளார். (204-135)

## உதயவாக்கு

**மனித உதடுகள் சிந்தும் ஒவ்வொரு சொல்லும் இறை உலகில் எதிரொலிக்கின்றது.**

*- அட லெயிட் அன் புறக்டர்.*

## நாளை

ஆடி 19
வெள்ளிக்கிழமை
04.08.2006
திதி : தசமி
நள்ளிரவு : 11.58
நட்சத்திரம் : அனுசம்
முன்னிரவு : 09.37
வரலட்சுமி விரதம்
சுபநேரம் : 06.04 - 07.34
ராகுகாலம் : 10.34 - 12.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தரப்பு தொடரில் பங்கேற்பது குறித்த மேற்கிந்திய தீவுகளின் முடிவில் தாமதம்

சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் செப்ரெம்பர் மாதம் நடக்கவுள்ள முத்தரப்பு கிரிக்கெட் தொடருக்கு சம்மதம் தெரிவிப்பதில் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை தாமதம் காட்டிவருகிறது.

இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு கிரிக்கெட் தொடர் சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடக்கவிருப்பதாக இந்திய கிரிக்கெட் சபை நேற்றுமுன்தினம் அறிவித்தது. இத்தொட ருக்கு இந்தியா, ஆஸ்திரேலியா அணிகள் சம்மதம் தெரிவித்தன. இந்நிலையில் தொடரில் பங்கேற்கும் மற்றொரு நாடான மேற்கிந்திய அணி தனது முடிவைத் தெரிவிப்பதில் தாமதம் காட்டி வருகிறது. இது குறித்து மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை நிர்வாக அதிகாரி கூறுகையில்:-

முத்தரப்பு தொடரில் பங்கேற்பது குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இத்தொடர் நடக்கும் இடங்களும் திகதிகளும் பல முறை மாற்றப்பட்டு வந்துள்ளன. முடிவில் சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் நடக்கவிருப்பதாக இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இன்னும் இரு தினங்களில் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் கூட்டம் நடக்கவுள்ளது. கூட்டத்தில் வீரர்களின் ஒத்துழைப்பு முழுமையாகக் கிடைக்கும் பட்சத்தில் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் பங்கேற்கும் - என்றார்.

இத்தொடரிலிருந்து மேற்கிந்தியத் தீவுகள் விலகினால் அதற்குப் பதிலாக நியூசிலாந்து அல்லது இலங்கை அணி பங்கேற்கும் எனத் தெரிகிறது. இந்தியா, இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு கிரிக்கெட் எதிர்வரும் 14ஆம் திகதி கொழும்பில் தொடங்குகின்றது. (8)

## சானியா ஜோடி முதல் சுற்றில் வெற்றி

டபிள்யூ.டி.ஏ. அந்தஸ்த்துப் பெற்ற 'அகுரா கிளாசிக்' ரென்னிஸ் தொடர் அமெரிக்காவின் சான் டியாகோ நகரில் நடக்கின்றது. இதில் இந்தியாவின் சானியா மிர்சா, தென் ஆபிரிக்காவில் லிசெல் கூபருடன் ஜோடி சேர்ந்து விளையாடி வருகிறார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதல் சுற்றுப் போட்டியில் இந்த ஜோடி கனடாவின் மவுரின் டிரெக், சிலோவாக்கியாவின் டினா கிருசன் ஜோடியை எதிர்கொண்டது. இந்தப் போட்டியில் சானியா ஜோடியின் ஆட்டம் மிக மோசமாக இருந்தது. ஆனால், இதைச் சரிவர பயன்படுத்திக் கொள்ள எதிரணி ஜோடி தவறியது.

இதனால், சானியா ஜோடி முதல் செற்றை 6 - 0 என கைப்பற்றியது. இரண்டாவது செற்றில் சானியா ஜோடிக்கு கனடா - சுலோவாக்கியா ஜோடி கடும் நெருக்கடி கொடுத்தது. இருப்பினும் தங்கள் தவறுகளை விரைவில் திருத்திக்கொண்டு சிறப்பாக செயற்பட்ட சானியா ஜோடி 6 -4 என இரண்டாவது செற்றையும் வென்றது. இறுதியில் 6 - 0 , 6 - 4 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்றது. (8)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட்: முதற்கட்ட ரிக்கெற் விற்பனை

அன்டிகுவா, ஓகஸ்ட் 3

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான முதற்கட்ட ரிக்கெட் விற்பனை அமோகமாக முடிந்தது. 121 நாடுகளைச் சேர்ந்த ரசிகர்கள் ரிக்கெட்டுகளை வாங்கினர்.

4 ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகக் கிண்ணக் கிரிக்கெட் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் அடுத்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் அடுத்த ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ளது. மார்ச் 5ஆம் திகதி முதல் ஏப்ரல் 28ஆம் திகதி வரை இத் தொடர் நடைபெறவுள்ளது. இத் தொடரை நேரில் காண்பதற்கான ரிக்கெட் கட்டணம் பல்வேறு விதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உலகக் கிண்ணத் தொடரிற்கான முதற்கட்ட ரிக்கெட் விற்பனை கடந்த மே மாதம் தொடங்கியது. இதற்கிடையில் முதற்கட்ட விற்பனை நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்தது. நேரடியாகவும் இணையத்தளம் மூலமும் ரிக்கெட்டுகள் அமோகமாக விற்கப்பட்டன.

இது குறித்து உலகக் கிண்ணக் கிரிக் கெட் தொடரின் வர்த்தக மேலாளர் ஸ்டீபன் பிரைஸ் கூறியதாவது:-

''லீக் சுற்றில் முக்கியமான ஆட்டங்களுக்கான ரிக்கெட்டுகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்துவிட்டன. இணையத்தளத்திலும் சரி நேரடியாகவும் சரி ரிக்கெட்டுகளின் விற்பனை சிறப்பாக நடந்துள்ளது. ரசிகர்களைக் கவரும் கிரிக்கெட் ஆட்டமும் தொடரை நடத்தும் மேற்கிந்தியத்தீவுகளும்தான் இதற்குக் காரணம் ஆகும். 121 நாடுகளில் இருந்து ரசிகர்கள் ரிக்கெட்டுகளை வாங்கியுள்ளனர். அரையிறுதி மற்றும் இறுதியாட்டத்திற்கான ரிக்கெட் விற்பனை இன்னும் தொடங்கவில்லை. இதற்கும் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு இருக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்'' - இவ்வாறு அவர் கூறினார். (8)




# இலங்கை அணியின் டெஸ்ட் அந்தஸ்து வெள்ளிவிழா சரவணமுத்து மைதானத்தில்

இலங்கை கிரிக்கெட் அணி சர்வதேச கிரிக்கெட் சபையில் டெஸ்ட் அந்தஸ்துப் பெற்று 25 ஆண்டுகள் நிறைவு கொண்டாடப்படவுள்ளது. பி.சரவணமுத்து விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள தென்னாபிரிக்க - இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இதற்கான விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 1982 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இங்கிலாந்திற்கெதிராக தனது முதல் டெஸ்டை இலங்கை அணி விளையாடியது. இவ்வாட்டம் பி.சரவணமுத்து விளையாட்டு மைதானத்திலேயே நடைபெற்றது. இம்முதல் ஆட்டத்தை நினைவுகூரும் முகமாக அதே மைதானத்தில் நடைபெறும் தென்னா பிரிக்காவுடனான இரண்டாவது டெஸ்டில் அதற்கான வைபவம் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் முதல் டெஸ்ட் ஆட்டத்தில் பங்குபற்றிய 12 வீரர்களும் அதிகாரிகளும் நினைவுச்சின்னம் அளித்துக் கௌரவிக்கப்படவுள்ளனர். இந்த விழாவிற்கான அனுசரணையை ஹற்றன் நஷனல்வங்கி வழங்கவுள்ளது. 7 விக்கெட்டுகளால் இலங்கை அணி தனது முதல் டெஸ்டில் தோல்வியுற்றிருந்தது. அவ்வாட்டத்திற்கும் ஹற்றன் நஷனல் வங்கியே அனுசரனை வழங்கியிருந்தது.

விழாவில் கௌரவிக்கப்படவுள்ளோர்:

பண்டுல வர்ணபுர (தலைவர்), டுலீப மெண்டிஸ் (துணைத்தலைவர்), சிடாத் வெத்தமுனி, றோய் டயஸ், ரஞ்சன் மடுகல்ல, அர்ஜுன ரணதுங்க, சோமசுந்தர டீ சில்வா, அசந்த டீ மெல், லலித் களுபெரும, அனுரா ரணசிங்க, ஹேர்பி பெல்சிங்ஹ, கே.ரி.பிரான்ஸிஸ் (நடுவர்), எம். ராஜசிங்கம் (அணி முகாமையாளர்)(8)


## தொண்டர் ஆசிரியர் சங்கம் - யாழ்.மாவட்டம்

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாத தொண்டர் ஆசிரியர்கள் கவனத்திற்கு,

காலம்:- 04.08.2006 வெள்ளிக்கிழமை காலை 9 மணி

இடம்:- புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்

மேற்படி கடிதம் கிடைக்கப்பெறாத அனைத்து தொண்டர் ஆசிரியர்களும் தவறாது கலந்துகொள்ளவும். நேர்முகப் பரீட்சை நடத்தப்படல் தொடர்பான நடவடிக்கையை எடுக்கவுள்ளோம். தவறாது சமுகம் தரவும்.

(52885)(32.21.15.45) தலைவர்.


## வினாடி வினா போட்டி முடிவுகள்

யாழ். வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கணித வினாடிவினாப் போட்டிகளில் மாகாண மட்டத்திற்கு தெரிவாகியோர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

தெரிவாகியவர்களின் விவரம் வருமாறு:-

*தமிழ் மொழி மூலம்*

தரம் - 6 ஜெயக்குமார் நிதர்சன் (கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.), தரம் 7 - கிருஷ்ணி மனோகரன் (வேம்படி மகளிர் கல்லூரி), தரம் - 8 விஜயநாதன் நிரோஸன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), தரம் 9 - தர்மகுலசிங்கம் யதுர்சன் (யாழ். இந்துக் கல்லூரி ), தரம் 10 - சுந்தரலிங்கம் டினேஷ்சாந்(யாழ். இந்துக் கல்லூரி), தரம் 11 - பேரின்பநாதன் குகநாதன் (இடைக்காடு ம.வி.).

*ஆங்கில மொழி மூலம்*

தரம் 6 - பிரகதீஸ்வரன் குணவரன் (யாழ். இந்துக் கல்லூரி), தரம் - 7 முத்துக்குமாரன் விதுண்(யாழ். இந்துக் கல்லூரி), தரம் 8 - சுமிதா சிவசுப்பிரமணியம் (வேம்படி மகளிர் கல்லூரி), தரம் 9 - நமசிவாயம் பிரணவரூபன் (யாழ். இந்துக் கல்லூரி), தரம் - 10 ஜெயரத்தினம் ஜொய்மாதவன் (சம்பத்திரிசியார் கல்லூரி). (1-203)

## புலன்வலுவற்ற இருபாலருக்கும் தொழிற்பயிற்சி

வடக்கில் வசிக்கும் புலன்வலுவற்ற 15 வயதுக்குட்பட்ட இருபாலருக்கும் பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை தொழிற்பயிற்சிகளை வழங்கவுள்ளது.

கணனி, மின் இணைப்பு, சிற்பம், தையல், வைண்டிங், வெல்டிங் உள்ளிட்ட பல்வேறு தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்று பருத்தித்துறை கட்டைவேலி முகாம்குரு தெரிவித்தார். பயிற்சிகளைப் பெற விரும்புவோர் 'முகாமைக்குரு, பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை' கட்டைவேலி, கரவெட்டி' என்ற முகவரியுடன் நேரிலோ தபால் மூலமோ தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். நீண்ட தூரத்திலிருந்து வரும்பயிற்சியாளர்களின் வசதி கருதி தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (173)


## வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

பின்வரும் பொருள்கள் விற்பனைக்காக கேள்வி விண்ணப்பம் கோரப்படுகின்றது. விரும்புவோர் தங்கள் கேள்வி விண்ணப்பங்களை 15.08.2006ஆம் திகதிக்கு முன் *''பொது முகாமையாளர், வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி''* என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

01. தேக்கமரம் - 01
02. றொபின் மெசின் (டீசல்) 4'' பம் - 01
03. றொபின் மெசின் (20) 2'' பம் - 03

தலைமையகத்தில் பார்வையிடலாம்.

- பொது முகாமையாளர்

(சி-50627)(21.15.45)



## கண்ணீர் அஞ்சலி

சைவ பரிபாலன சபையின் ஆயுள் உறுப்பினரும் பல ஆண்டு காலம் உப செயலாளராகவும், செயலாளராகவும் பணியாற்றிய

### அமரர் அருளம்பலம் சேனாதிராசா

அவர்களின் மறைவையொட்டி சைவபரிபாலனசபையினர் கவலை அடைகின்றனர். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

(52890)(21.15.45) -சைவபரிபாலனசபை.



## மரண அறிவித்தல்

### திருமதி பெனடிக்ற் திரேசம்மா (பூமணி)



ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பெனடிக்ற் திரேசம்மா (பூமணி) நேற்று (02.08.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பெனடிக்ற் சிங்கநாயகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆசீர்வாதம் - பூரணத்தின் அன்பு மகளும் காலஞ்சென்ற யோசப் விக்றோரியாவின் (இராசமணி ரீச்சர்) அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராயப்பு எலிசபெத்தின் மருமகளும், கிருபா **(U.K.)**, ஊதிகா, பிரபா (சுவிஸ்), நிருபா (ஈச்சமோட்டை ஐஸ்கட்டி தொழிற்சாலை), டினுக்கா (சுவிஸ்), சொருபா **(U.K.)** ஆகியோரின் அன்புத் தாயும் கௌரி **(U.K.)**, பிறேம் (இத்தாலி), றஜீதா (சுவிஸ்), சசிகலா, ரகுராம் (சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு மாமியும் திவ்வியாஞ்சலி, நிவேதா, நிதர்சன், கௌதம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (03.08.2006) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று மரியன்னை தேவாலயத்தில் திருப்பலியின் பின்பு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
நிருபரன்ற் (மகன்).

*28, ஈச்சமோட்டைவீதி,*
*யாழ்ப்பாணம்.*
**T.P. 222 6496**

(52896)(21.15.45)



## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலி சந்திக்கு அருகிலுள்ள 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0773276407

(சி-50628)(21.15.45)



## மரண அறிவித்தல்

### திருமதி சோதிநாதன் கமலாம்பிகை



மண்டைதீவு முதலாம் வட்டாரத்தை சொந்த இடமாகவும் இலக்கம் 352, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சோதிநாதன் கமலாம்பிகை நேற்று (02.08.2006) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் சோதிநாதனின் அன்பு மனைவியும் சுப்பிரமணியம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் சோமசுந்தரம்- தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் தனபாலசிங்கம், சோதிமலர் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தாயும் இலங்கை நாயகி, பேரின்பநாயகம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் மங்கையர்க்கரசி, சரஸ்வதியம்மா, திலகவதி, தேவவதி, திருஞானசம்பந்தர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தியாகராசா, நடராசா, விநாயகமூர்த்தி, சுப்பிரமணியம் (அல்லைப்பிட்டி), கைலாசநாதர், சண்முகரத்தினம், சங்குவதி தில்லம்மா, செல்லம்மா, சோதிலிங்கம், கணபதிப்பிள்ளை, கதிர்காமநாதன், தில்லைவனம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் அருட்செல்வன் (லண்டன்), வித்தியவாணி (ஜேர்மனி), சத்தியரூபி, முரளிதாஸன் (லண்டன்), தனுசியா, பாமினி (லண்டன்), தர்மகுமார் (ஜேர்மனி), ஜெயகாந்தன் (ஆசிரியர் மல்லாவி), மதியழகன் (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் லண்டனில் வசிக்கும் செந்தூரன், அபர்னா, அஸ்மிகா, ஜேர்மனியில் வசிக்கும் கயந்தன், கயந்தி, காயத்திரி, கீர்த்தன், மல்லாவியில் வசிக்கும் எழிச்சிகா, தரங்கினி ஆகியோரின் பாசமிகு பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் 'இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**சோ.தனபாலசிங்கம்**
(மகன்)

*இல.352, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(52878)(21.15.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோண்டாவில் வாகீஸ்வரி கல்வி வளர்ச்சிக் கழகத்தின் கணனி வகுப்பு ஆரம்ப நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் அமரர் திருமதி பவளம் வைரமுத்து ஞாபகார்த்த தங்கப்பதக்கத்தை யாழ். பல்கலைக்கழக மாணவர் நந்தகுமார் மயூரன் பெறுவதை முதற்படத்திலும் - முதியோர்களை கௌரவிக்கும் நிகழ்வில் முதியோர் ஒருவருக்கு பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் -

நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: நேசன்)

# மந்திகை ஆஸ்பத்திரியில் மீண்டும் பிரான்ஸ் மருத்துவக் குழுவின் சேவை

வடமராட்சி,ஓக.3

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சுமார் நான்காண்டுகளின் பின்னர் மீண்டும் பிரான்ஸ் நாட்டு மருத்துவர்கள் மருத்துவ சேவையில் ஈடுபட்டு வருகின்றனர்.

1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வடமராட்சியில் நடைபெற்ற லிபரேசன் ஒபரேசன் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இவ் வைத்தியசாலையில் பிரான்ஸ் வைத்தியக் குழுவினர் மருத்துவ சேவையை ஆரம்பித்தனர். அவ்வேளையில் சத்திரசிகிச்சை வைத்திய சேவையினை மட்டுமே இக்குழுவினர் வழங்கினர்.

இலங்கையில் யுத்தநிறுத்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கடந்த 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வைத்திய சேவையினை முடித்துக்கொண்டு பிரான்ஸ் வைத்தியக் குழுவினர் வெளியேறினர்.

யுத்தசூழ்நிலை உருவாகியுள்ள இவ்வேளையில் மீண்டும் இங்கு வைத்திய சேவையை ஆரம்பிக்கவென பிரான்ஸ் வைத்தியக்குழுவினர் வந்துசேர்ந்து வைத்தியசாலை விடுதியில் தங்கியுள்ளனர். இக்குழுவில் இணைப்பாளரும் மருத்துவரும் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் சில தினங்களுக்கு முன்னர் நோயாளர் தங்கும் விடுதிகளையும் மருத்துவப் பிரிவுகளையும் சுற்றிப்பார்வையிட்டு வைத்தியசாலையின் பௌதிக வளங்கள் குறித்துத் தகவல்களைத் திரட்டியுள்ளனர்.

இக்குழுவில் இடம்பெற்றுள்ள மருத்துவர் தற்போது அவசர சிகிச்சைப் பிரிவில் பணியாற்றவுள்ளார். சில வாரங்களில் சத்திரகி சிகிச்சை நிபுணர், மயக்க மருந்து ஏற்றும் நிபுணர் ஆகியோரைக்கொண்ட குழுவினர் வந்து சேர்வார்கள். அவர்கள் வந்த பின்னர் சத்திரசிகிச்சைப் பிரிவில் கடமைகளைப் பொறுப்பேற்பார்கள்.

பிரான்ஸ் வைத்தியக் குழுவினரின் வருகையால் இவ்வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நிபுணர் இல்லாதகுறை நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (173)

## கோப்பாயில் மாடுகளுக்கு தடுப்பூசி

அச்சுவேலி,ஓக.3

கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய் தடை மருந்து ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இப்பகுதி கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இன்று வியாழக்கிழமை கோப்பாய் வெள்ளெருக்க பிள்ளையார் கோயிலடி மற்றும் கோப்பாய் மத்தி கந்தசுவாமி கோயிலடி ஆகிய இடங்களிலும் -

நாளை வெள்ளிக்கிழமை ஆனந்தபுரம், இருபாலை பாரதி சனசமூக நிலையத்திலும்-

மாடுகளுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (11)

# குடாநாட்டு பிரதேச சபைகளுக்கு மாற்றுத் திட்டங்களுக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,ஓக.3

குடாநாட்டில் உள்ள பிரதேச சபைகளுக்கு வருடாந்த அமுலாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாற்றுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குறித்துரைக்கப்பட்டுள்ள மாகாண அபிவிருத்தி நன்கொடைத் திட்டத்தின் கீழ் மாற்றுத் திட்டத்திற்கு விண்ணப்பித்த பிரதேச சபைகளுக்கே உள்ளூராட்சி ஆணையாளரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அனுமதிபெற்ற பிரதேச சபைகள் மற்றும் வேலைத் திட்டங்கள் குறித்த விவரம். வருமாறு:-

சுன்னாகம் பிரதேச சபை - குப்பிளான் பரிச்சம்குள வீதிக்கு மின்சார விநியோகம் -

புத்தூர் பிரதேச சபை - அச்சுவேலி நீர்த்தாங்கி அமைத்தல் -

தீவகம் தெற்குப் பிரதேச சபை - புங்குடுதீவு நீர்த்தாங்கி அமைத்தல் -

அனுமதி வழங்கப்பட்ட மாற்றுத் திட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (95)

# வேலணை வைத்தியசாலையை புனரமைப்பதற்கு நடவடிக்கை

நல்லூர், ஓக.3

வேலணை கிராம வைத்தியசாலையைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என யாழ். உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் தெரிவித்தார்.

இவ் வைத்தியசாலை தவிர கொடிகாமம் மத்திய மருந்தகம், பிரசவ விடுதி ஆகியவற்றின் அம்புலன்ஸ் தரிப்பிடம், சாரதிகளுக்கான அறை என்பனவும் புனரமைக்கப்படவுள்ளன.




இதற்கான கேள்விப் பத்திரங்கள் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் கோரப்பட்டுள்ளன.

ஒப்பந்தகாரர்கள் தெரிவுசெய்யப்பட்டதும் மேற்படி வேலைகள் ஆரம்பிக்கப்படும் என ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - வைத்தியசாலை சம்பந்தப்பட்ட புனரமைப்பு வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கோரும் பணியினை முதல் தடவையாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திடம் சுகாதாரப் பகுதி ஒப்படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (204-111)

## தென்மராட்சியில் கால்நடைகளின் விவரம் சேகரிப்பு

தென்மராட்சி,ஓக.3

தென்மராட்சி பிரதேசத்தில் நல்லின மாடுகள், ஆடுகள், கோழிகள் ஆகியவை வைத்திருப்போரின் விவரங்கள் சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

நல்லின மாடுகள், ஆடுகள், கோழிகள் வைத்திருப்போர் தமது விவரங்களைப் பதிவு செய்யுமாறு கால்நடை வைத்தியர் கேட்டுள்ளார். (117)

# சிறுப்பிட்டியில் மீட்ட முண்டத்தின் தலை எங்கேயெனத் தேடுதல்

கரவெட்டி, ஓக.3

சிறுப்பிட்டி அம்மன் கோயில் கேணியிலிருந்து மீட்கப்பட்ட சடலத்தின் தலைப் பகுதியை பொலீஸார் தேடி வருகின்றனர்.

உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்தவரும் சிறுப்பிட்டியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலைய உரிமையாளருமான விஸ்வலிங்கம் கௌரூபன்(வயது -26) என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலையிலிருந்து காணாமற்போயிருந்தார்.

மறுநாள்நாள் அவரது சடலம் சிறுப்பிட்டி அம்மன் கோயில் கேணியிலிருந்து தலையற்ற முண்டமாக மீட்கப்பட்டது.

இது குறித்து விசாரணை மேற்கொண்டு வரும் அச்சுவேலிப் பொலீஸார் சடலத்தின் தலைப்பகுதியைத் தேடிவருகின்றனர். சடலம் மீட்கப்பட்ட கோயிலின் கிழக்கே பிரதான வீதிவரை தரையில் இரத்தக் கறைகள் காணப்பட்டன என்று கூறப்படுகிறது.

மீட்கப்பட்ட முண்டத்தில் தங்கச் சங்கிலியும் கை விரல் தங்க மோதிரமும் இருந்தன. ஆனால், இறந்தவர் முன்னதாக எரிபொருள் நிலையத்திலிருந்து எடுத்துவந்ததாகக்கருதப்படும் விற்பனைப் பணமான 50ஆயிரம் ரூபாவும் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் மீட்கப்படவில்லை. (70)



யாழ்.கோட்டை முற்றவெளிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த வயோதிபரின் சடலத்தைப் படத்தில் காணலாம். (படம்:நேசன்)

## தென்மராட்சியில் மாதிரிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.3

தென்மராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 11 விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடத்தை முன்னேற்றுவதற்காக எதிலியா மறுவாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனான மாதிரிப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

பரீட்சைக்குரிய வினாத்தாள்களை இன்று வியாழக்கிழமை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (202)

# மீன்பிடி உபகரணப் பாதுகாப்புக்கு உடுத்துறையில் அறைக் கட்டடம்

வடமராட்சி கிழ.ஓக.3

வடமராட்சி கிழக்கு உடுத்துறைப் பிரதேசத்தில் கடற்றொழில் உபகரணங்களைப் பாதுகாப்பதற்கான அறை அமைக்கப்பட்டுள்ளது.

'உலக தரிசனம்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட இக் கட்டடத்தின் திறப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

உடுத்துறை கிராம அலுவலர் எம்.வி.தவராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த பாலையா ஏற்றினார்.

கட்டடத்தை உலக தரிசனம் நிறுவனத்தின் மாவட்ட முகாமையாளர் றோக் மார்ட்டின் திறந்துவைத்தார்.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசச் செயலாளர் கொ.அ.ஸ்ரனிஸ்லொஸ், வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவன தலைவர் எஸ்.பொன்னம்பலம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (204-182)

## வலிகாமம் பிரதேச முன்பள்ளிகளுக்கு கூரைப் பாய்கள்

சுழிபுரம்,ஓக.3

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் இயங்கும் 64 முன்பள்ளிகளுக்கு பிரதேச செயலகத்தால் கூரைப் பாய்கள் வழங்கப்பட்டுள்ளன.

முன்பள்ளி விழாக்களின் போது நிழல் கொட்டகைகளை அமைக்கும் வகையில் இந்த கூரைப் பாய்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (29)

# வாக்காளர் பதிவை மேற்கொள்ள குரும்பசிட்டி கிராமச் சங்கம் உதவி

யாழ்ப்பாணம்,ஓக.3

குரும்பசிட்டியை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட இதுவரை வாக்காளராகப் பதிவை மேற்கொள்ளாதவர்கள் தங்கள் பதிவை மேற்கொள்ள குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் உதவி நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

வாக்காளராகப் பதிவை மேற்கொள்ளும் பணிகள் எதிர்வரும் 6ஆம் திகதி காலை 9 மணிக்கு வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கிராம அலுவலர்கள், வாக்காளர் பதிவை மேற்கொள்ளும் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பதிவுகளை மேற்கொள்வர்.

இதில் ஜே/242, ஜே/243 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த இதுவரை வாக்காளராகப் பதிவுசெய்துகொள்ளாத 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் தங்கள் அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் அல்லது இவற்றின் பிரதிகளுடன் சமுகமளித்து தமது பதிவை மேற்கொ[illegible] விக்கப்பட்டது. (204)

# வாகீஸ்வரி சனசமூக நிலைய பொதுஅறிவுப் போட்டி முடிவுகள்

கோண்டாவில்,ஓக.3

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலைய அனுசரணையுடன் அமரர் யுவராஜா ஜேம்ஸ் றெஜீவன் ஞாபகார்த்தமாக நண்பர்கள் வட்டம் அண்மையில் நடத்[illegible] திறந்த போட்டிப் பரீட்[illegible] பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்ற வெற்றியாளர்களின் பெயர் விவரம் வருமாறு:-

அ.ரம்சன்ராஜ் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ச.லிக்சன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ப.அம்பிகை (வேம்படி மகளிர் கல்லூரி).

(204-49)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிநிலை வெற்றிடம்

### தேசநிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சு
### வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம்

வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் கீழ் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் பதவி ஒன்றிற்காக விண்ணப்பம் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

**கல்வித்தகைமையும் அனுபவமும்**

1. அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு நிறுவனம் ஒன்றில் தொழில்சார் பரீட்சையில் ஆகக் குறைந்தது இடைநிலைத் தகைமை அத்துடன் தனியார் கணக்கீட்டு பரிசோதனை நிறுவனம் அல்லது பொதுநிறுவனம் ஒன்றில் 05 வருட கால கணக்காய்வு அனுபவம்.

அல்லது

2. கணக்காளர் நாயகத்தின் திணைக்களத்தில் கணக்காய்வு அத்தியட்சகராக குறைந்தது 10 வருட கால அனுபவம்.
3. கணனிமயப்படுத்தப்பட்ட கணக்காய்வு திட்டத்தில் சிறந்த அறிவு.

**பொது நிபந்தனை**

1. இப்பதவி ஒப்பந்த அடிப்படையிலானதாகும். முதலில் ஒரு வருட ஒப்பந்தமும் பின்னர் தேவைக்கேற்பவும் நீடிக்கப்படலாம்.
2. வடக்கு - கிழக்கில் எந்தப் பிரதேசத்திற்கும் சென்று செயலாற்ற சிறந்த ஆரோக்கியத்தையும் உடல் நிலையையும் விண்ணப்பதாரி கொண்டிருத்தல்வேண்டும்.
3. 30 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல்வேண்டும். (தகுதியான விண்ணப்பங்கள் கிடைக்காவிடின் மேல் வயதெல்லையில் தளர்ச்சி காட்டப்படும்)
4. ஊதியம் 2000.12.26ஆம் திகதியன்று வெளிவந்த முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபம் இல.10இன் படியான பந்தி 4, 5 ஆகியனவற்றின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகுதியையும் அனுபவத்தையும் பொறுத்து தீர்மானிக்கப்படும்.
5. சுயவிவரத் திரட்டுடன், சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து கீழ்க்காணும் முகவரிக்கு 2006.08.18ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்புதல்வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவியென குறிப்பிடவும்.

அனுப்பவேண்டிய முகவரி:

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம்,**
**பிரதம செயலாளரின் செயலகம்,**
**உட்துறைமுக வீதி,**
**திருகோணமலை.**

(சி/50619)(21.15.17.32)

## யூபிலி வாழ்த்துக்கள்



30.07.2006 அன்று ஆயர் பணியில் இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்த எமது பேரன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய கலாநிதி பேரருட்திரு.

**தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**

அவர்களை மனமார வாழ்த்துவதுடன், அவர் ஆயர் பணிக்குத் தேவையான உடல், உள, ஆளுமை பலமும், இறையருளும் பெறவேண்டுகின்றோம்.

வைத்திய கலாநிதி
புஸ்பராணி லியோன், **பேதுரு பிலிப்ஸ் குடும்பத்தினர்**
ஆயுர்வேத டாக்டர் மட்டுவில் வடக்கு
நவாலி தெற்கு.

(52868)(21.17.15)

## கண்ணீர் அஞ்சலி

நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலயம், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, வண்ணை கோம்பையன் மணல் பரிபாலன சபை மற்றும் பல சமய, சமூக ஸ்தாபனங்களில் சிவப்பணி, சமூகப்பணி சிறப்புடன் ஆற்றிய

**அருளம்பலம் சேனாதிராசா**

அவர்கள் 31.07.2006 கொழும்பில் காலமானார். அன்னார் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீராவியடி. (52865) **வை.இரகுநாதமுதலியார் குடும்பம்.**

## மரண அறிவித்தல்

### திருமதி இராசமணி துரைசிங்கம்



புளியங்கூடல், ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் நல்லூர், செல்லர் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய திருமதி இராசமணி துரைசிங்கம் 30-07-2006 இல் கனடாவில் காலமானார்.

அன்னார் துரைசிங்கம் (இளைப்பாறிய ஓவசியர், யாழ். மாநகரசபை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அப்பாக்குட்டி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகலிங்கம் - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், இரவீந்திரன் (கனடா), விமலேந்திரன் (கனடா) குணேந்திரன் (அமெரிக்கா), யோகேந்திரன்(கனடா), மஞ்சுளா (பெங்களூர்) ஆகியோரின் பாசமிகு தாயும் மாலதி (கனடா), சுமதி (கனடா) ஐமுனாராணி (அமெரிக்கா), ரஜனி (கனடா), ராஜகுமாரசாமி (பெங்களூர்) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, முத்துத்தம்பி, சுந்தரம், சதாசிவம், வீரசிங்கம், சிந்தாமணி ஆகியோரின் சகோதரியும் றொஜர், யூலியன், டெல்சின், நிரூபன், மிதிலன், நவீன், பிரவீன், சேயோன், தியானா, நிலானி, யாமினி, மிதிலா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-08-2006) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பொன்.தர்மேந்திரன்**

*தொடர்பு:*
**நா.துரைசிங்கம் (கனடா),**
**தொ.பே.0019052099269**

(52878)(21.15.17)

## சிறுப்பிட்டியில் காவலரண் தீக்கிரை

வலி.வடக்கு,ஓக3 சிறுப்பிட்டி சங்கக்கடை சந்திக்கு அண்மையிலிருந்த இராணுவக் காவலரண் கடந்த திங்கட்கிழமை தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

அவ்வேளையில், காவலரணில் இராணுவத்தினர் எவரும் கடமையில் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் இந்த இராணுவக் காவலரணுக்கு அண்மையிலுள்ள பாழடைந்த கேணியிலிருந்து தலையற்ற முண்டமாக இமையாணனைச் சேர்ந்த இளைஞரின் சடலம் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(204-86)

## சாவகச்சேரியில் தையல் பயிற்சி

தென்மராட்சி,ஓக.3 சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் இலவச தையல் பயிற்சி வகுப்பினை சாவகச்சேரி யாழ். வீதியில் உள்ள கழக அலுவலகத்தில் ஆரம்பித்துள்ளனர்.

இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள யுவதிகள் உடனடியாக இணைந்துகொள்ளலாம் என்று கழகத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார். மூன்று மாதங்கள் பயிற்சி வழங்கப்பட்டு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

(117)

UNOPS United Nations Office for Project Services

# INVITATION TO BID

**Social Care Centre Construction Programme**
**Funded by UNICEF and SCiSL**
**For the Ministry of Social Welfare and the Ministry of Child Care & Women Empowerment of the Democratic Socialist Republic of Sri Lanka:**

**CONSTRUCTION OF FOUR SOCIAL CARE CENTRES:**

LOT 1: SOCIAL CARE CENTRE, PACHCHILAIPALLI
IN THE DISTRICT OF KILINOCHCHI
(CONTRACT NO. SL O6C1- 0101)

AND

LOT 2: SOCIAL CARE CENTRE, POONAKARY
IN THE DISTRICT OF KILINOCHCHI
(CONTRACT NO. SL O6C1- 0102)

AND

LOT 3: SOCIAL CARE CENTRE, PUTHUKUDIYIRUPPU
IN THE DISTRICT OF MULLAITIVU
(CONTRACT NO.SL O6C1 - 0103)

AND

LOT 4: SOCIAL CARE CENTRE, MARITIMEPATTU
IN THE DISTRICT OF MULLAITIVU
(CONTRACT NO.SL O6C1 - 0104)

1. A Memorandum of Understanding between the Government of Sri Lanka, UNICEF and SCiSL has been signed to construct Social care Centres in the areas affected by the Tsunami on 26th December 2004. The implementation partner of UNICEF and SCiSl is the United Nations Office for Project Services (UNOPS)- Sri Lanka Project implementation Facility (SLPIF)

2. United Nations Office for ProJect Services - Sri Lanka Project Implementation Facility, hereinafter referred as "UNOPS-SLPIF", invites sealed bids from the eligible bidders for the Construction of four Social Care Centres in Kilinochchi and Mullaitivn:

| | Location | Bid Bond | ICTAD Grading |
|---|---|---|---|
| Lot 1 | SCC, Pachchilaipalli, Kilinochchi | 25,000 | ≥ M5 |
| Lot 2 | SCC, Poonakary, Kilinochchi | 25,000 | ≥ M5 |
| Lot 3 | SCC, Puthukudiyiruppu, Mullaitivu | 25,000 | ≥ M5 |
| Lot 4 | SCC, Maritimepattu, Mullaitivu | 25,000 | ≥ M5 |

3. Interested bidders may submit a written application and purchase a complete set of bidding documents upon the payment of a non refundable fee of Rs 500 for each lot, Bidding documents will be issued to eligible bidders 9.30 a.m to 5.00 p.m on working days from 8 th Aug 2006 to 17 th Aug 2006 at UNOPS - SLPIF in Colombe at 17 Park Avenue, Colombo 5 and at UNOPS-SLPIF in Kilinochchi at No.230, Thirunagar Road, Kilinochchi. A pre-bid meeting will be held at UNOPS office Kilinochchi on the 8th of August at 11 a.m, and in Colombo on the 11 th of August at 11 a.m. Contractors with ICTAD Grading, mentioned above may submit the complete Bids (Lots 1,2,3,& 4) or partial bids Lot 1, Lot 2, Lot 3, Lot 4, provided full BOQ are submitted in a lot for each location.

4. Additional information regarding the Bidding Documents will be available at the office of the Chief Technical Advisor of UNOPS-SLPIF at No 17, Park Avenue, Colombo 5.

5. This Invitation to Bid shall close at 2 pm on 18 th Augusr 2006 at UNOPS office, 17 Park Avenue, Colombo - 5. All bids must be addressed to The Country Co-ordinator of UNOPS Sri Lanka Project Implementation Facility (UNOPS - SLPIF) and accompanied by a Bid Security in the prescribed format.

6. UNOPS - SLPIF will not be responsible for any costs or expenses incurred by bidders in connection with the preparation or delivery of Bids.

**Country Coordinator**
**UNOPS - SLPIF**

(C/50615)(21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடையார்கட்டில் தண்ணீரின்றி மேட்டுநிலப் பயிர்கள் நாசமாகின

## விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபா நஷ்டம்

பரந்தன்,ஓக.3

உடையார்கட்டு கிழக்கில் செய்கை பண்ணப்பட்ட மேட்டுநிலப் பயிர்கள் தண்ணீர் பாய்ச்சமுடியாத நிலைமையால் கருகி நாசமாகின. இதனால் பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

பல ஏக்கர் கணக்கான பயிர்கள் இவ்வாறு கைவிடப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இப்பயிர்ச் செய்கைகளுக்குத் தண்ணீர் பாய்ச்சமுடியாத நிலைமை ஏற்பட்டதாகவும் -

இதன் காரணமாகவே மேட்டுநிலப் பயிர்ச் செய்கை இடைநிறுத்தப்பட்டதென்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

விவசாயிகள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் சிறுபோகப் பயிர் உற்பத்தியை மேற்கொண்டு வந்தனர்.

கிணறுகளில் உள்ள தண்ணீரைப் பயிர்களுக்குப் பாய்ச்சி விவசாயப் பயிர்ச்செய்கை மேற்கொண்டு வந்தனர். எரிபொருள் தட்டுப்பாட்டால் கிணற்று நீரையும் பயிர்களுக்கு இறைக்கமுடியாத நிலைமை ஏற்பட்டது என்று விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

உரிய அதிகாரிகள் இவ்விடயத்தைக் கவனத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈட்டை வழங்குவதன் மூலம் அவர்கள் மீண்டும் பயிர்ச்செய்யை மேற்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டது. (203-352)

## பொதுமண்டபம் அமைக்க அடிக்கல் நடப்பட்டது

பரந்தன்,ஓக.3

வலைஞர்மடம் கிராமத்தில் அமைக்கப் படவுள்ள பொதுமண்டபத்திற்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது.

'நெக்டெப்' ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்ட உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் 21 லட்சம் ரூபா செலவில் இந்த மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற இந்நிகழ்வில் நிறுவனப் பணியாளர்கள், 'நெக்டெப்' பிரதிநிதிகள், கடற்புலிகளின் பிரதேச பொறுப்பாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (203-352)



பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் அதிவேகத்தில் வந்த 'கன்ரர்' வாகனம் ஒன்று வீதியால் வந்துகொண்டிருந்த உழவு இயந்திரம் ஒன்றை விலகிச் சென்றபோது விபத்து இடம்பெற்றது. அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் உழவு இயந்திரச் சாரதி தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தார். விபத்துக்குள்ளான வாகனங்களைப் படத்தில் காணலாம். *(படம்: பரந்தன் செய்தியாளர்)*

## வன்னியில் கட்டுமானப் பயிற்சிகளில் மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்பு

ஒட்டுசுட்டான்,ஓக.3

வன்னியில் பரவலாக நடைபெற்று வரும் கட்டுமானப் பயிற்சிகளில் மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில், மல்லாவிப் பிரதேசத்திலுள்ள கப்டன் யோகன் பயிற்சிப் பாசறையில் பயிற்சி பெற்ற 5ஆவது உள்ளக அணியினர் பயிற்சி களை நிறைவுசெய்து வெளியேறியுள்ளனர்.

இந்த அணியினருக்கான பயிற்சி நிறைவு நிகழ்வின்போது பயிற்சிபெற்றோருக்கு மரதன் ஓட்டம், கயிறு இழுத்தல், குறி பார்த் துச் சுடுதல் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு இதில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இப்பயிற்சி நிறைவின்போது பயிற்சியாளர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், அவர்களுக்கான ஆள் அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டன.

எமது மக்களைப் பாதுகாப்பதற்காகப் போராட்டத்தை விரைவுபடுத்தும் நோக்குடன் இப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன எனவும் -

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கிளிநொச்சி உருத்திரபுரேஸ்வரத்தில் வீரவேங்கை குமார் பயிற்சிப் பாசறையின் மக்கள் கட்டுமானப் பயிற்சிகளும் நிறைவடைந்துள்ளன.

* * *

கிளிநொச்சி அம்பாள்குளம் லெப்டினன்ட் கேணல் மகேந்தி பயிற்சிப் பாசறை அணியிருக்கான பயிற்சிகள் நிறைவடைந்துள்ளன.

இப்பயிற்சி நிறைவு நிகழ்வில் ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் கந்தன், செ.முகுந்தன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

அத்துடன், மேஜர் யாழிசை பயிற்சிப் பட்டறையில் 500 மகளிருக்கு நடத்தப் பட்ட பயிற்சிகளும் நிறைவடைந்துள்ளன.

* * *

வவுனியா மாவட்டத்தின் வடக்கு கிராமங்களைச் சேர்ந்த பெருமளவான ஆண்களும், பெண்களும் சுயவிருப்பத்தின் பெயரில் தற்காப்புப் பயிற்சிகளைப் பெற்றுவருகின்றனர்.

அத்துடன், ஒட்டுசுட்டான் பிரதேச மக்களும் தற்காப்புப் பயிற்சிகளைப் பெறுவதில் ஆர்வம் காட்டிவருகின்றனர். கூழாமுறிப்பு குணம் பயிற்சிப் பாசறை, கப்டன் எழிலன் பயிற்சிப் பாசறை போன்றவற்றிலும் பயிற்சிகள் வழக்கப்பட்டு வருகின்றன. (203-352-341-355)

## வீதி திருத்தப்படவில்லை மக்கள் சிரமம்

முழங்காவில்,ஓக.3

பல்லவராயன்கட்டு - வேரவில் வீதி, 25 வருடங்களுக்குமேல் புனரமைப்புச்செய்யப்படாது உள்ளமையால் அந்த வீதியால் போக்குவரத்துச்செய்யமுடியாது மக்கள் பெரும் சிரமங்களைத் எதிர்கொண்டு வருகின்றனர்.

மழைகாலங்களில் இந்த வீதியை நினைத்தே பார்க்கமுடியாத நிலைமையே ஏற்படுகின்றது.

எனவே, இனிவரும் மழைகாலத்திற்கு முன்னர் இவ்வீதியைப் புனரமைப்புச் செய்துதர உரியவர்கள் ஆவணசெய்ய வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (203-323)

## உமையாள்புரத்தில் தொற்றுநோய் பரவும் அபாயம் கழிவுகள் வீசப்படுவதே இதற்குக் காரணமாம்

முழங்காவில்,ஓக.3

உமையாள்புரம் பகுதியில் ஏ-9 பிரதான வீதிக்கருகில் கழிவுப்பொருள்கள் கொட்டப்படுவதால் அவ்வீதியூடாகப் போக்குவரத்துச் செய்யமுடியாது துர்நாற்றம் வீசும் நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், தொற்றுநோய்கள் பரவக்கூடிய அபாய நிலைமையும் ஏற்பட்டுள்ளது என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கரைச்சிப் பிரதேச சபையினரால் இப்பகுதியில் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன எனவும் -

கடந்த 6 மாத காலமாக இப்பகுதிகளில் கொட்டப்பட்ட கழிவுகள் அகற்றப்படாமையால் துர்நாற்றம் வீசும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதியால் போக்குவரத்துச் செய்பவர்கள் துர்நாற்றம் காரணமாக மூச்சுவிடமுடியாது பெரும் அருவெருப்புடன் போய் வருகின்றனர்.

இந்நிலையில் அப்பகுதிகளில் நிரந்தரமாகக் குடியிருப்பவர்களின் நிலைமை சொல்லத்தேவையில்லை.

எனவே, உரியவர்கள் விரைவில் இவ்விடயத்தில் கவனமெடுத்து தொற்றுநோய்கள் பரவாது தடுக்க முன்வரவேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (203-323)

## கவனிப்பாரின்றிக் கைவிடப்பட்ட நிலையில் முள்ளியவளையில் சிறுவர் பூங்கா

புதுக்குடியிருப்பு,ஓக.3

முள்ளியவளையில் அமைந்துள்ள கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைக்குச் சொந்தமான சிறுவர் பூங்கா கவனிப்பாரின்றிக் கைவிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாகச் சிறார்கள் இப்பூங்காவைப் பயன்படுத்தமுடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இங்கு இருக்கும் ஒரேயொரு சிறுவர் பூங்காவாக இது இருக்கின்றபோதும் அதனை எவரும் கவனிக்காது உள்ளமை கவலையளிப்பதாகப் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு மையமாக சிறுவர்பூங்கா ஒன்று இருந்தும் அது உரிய முறையில் பராமரிக்கப்படாமையால் சிறுவர் பூங்கா எதுவும் இல்லாத நிலைமையே தோன்றியுள்ளது.

எனவே, உரியவர்கள் இவ்விடயத்தைக் கவனத்திலெடுத்து, சிறார்களின் நலனில் அக்கறைகொண்டு இந்தச் சிறுவர் பூங்காவை உரியமுறையில் இயங்கவைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (203-353)

# வன்னிச் செய்திகள்

## முறிகண்டியில் சிரமதானம்

கிளிநொச்சி,ஓக.3

முறிகண்டிப்பகுதியில் வர்த்தகம் மேற்கொள்ளப்படும் இடங்கள் தமிழீழ சுகாதார சேவையினரின் ஒழுங்குபடுத்தலில் சிரமதானம் மூலம் துப்புரவுசெய்யப்பட்டுள்ளன.

இச்சிரமதானப் பணியில் தமிழீழ சுகாதார சேவைகளின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையினர், விசேட நடவடிக்கைப் பிரிவினர், சூழல் மேம்பாட்டுப் பிரிவினர், தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவினர் உட்படப் பலர் இணைந்துகொண்டனர். (203-307)

## அரசியல் கருத்தரங்கு

பரந்தன்,ஓக.3

முள்ளியவளைப் பிரதேசத்தில் கடமை புரியும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பணியாளர்களுக்கான அரசியல் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது.

தண்ணீரூற்றுப் பிரதேசப் பொறுப்பாளர் பரன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் இளங்கோ, விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன், தளபதிகளில் ஒருவரான குமரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். (203-352)

# வைத்தியசேவைகள் கிட்டாத பிரதேசங்களில் திலீபன் மருத்துவமனையின் அளப்பெரிய சேவை

### செய்திக்கட்டுரை

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 1998 ஆம் ஆண்டிலிருந்து 2002ஆம் ஆண்டுவரை வைத்திய நிலையங்கள் இன்றி இப்பகுதியில் வாழும் சுமார் 750 குடும்பங்கள் கொண்ட மக்கள் சொல்லொணாத்துயரமடைந்தனர்.

இங்குமட்டுமல்ல தமிழ் பிரதேசங்களில் வைத்தியசாலைகள் இருந்தும் மருந்துத் தட்டுப்பாடு, வைத்தியர் பற்றாக்குறை போன்ற பலகுறைபாடுகளைக் காரணம்காட்டி மக்கள் சிகிச்சை பெறமுடியாத நிலையில் நோய்வாய்ப்பட்டு இறப்பதனையும் சிகிச்சை பெற முடியாது துன்பப்படுவதையும் கருத்திற்கொண்ட தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களால் தியாகதீபம் திலீபன் மருத்துவமனைகள் ஆரம்பிக்கப்பட்டு போராளி வைத்தியர்களை நியமித்து மக்களினது நோய்களுக்கான சிகிச்சைகளை இலகுவாக வழங்கிமக்கள் நோய்கள் நீங்கி சுகாதாரமாக வாழ வழி வகுத்து வைத்தமை மக்களுக்குப் பேருதவியாக இருந்தது.

இதன் ஓர் அங்கமாக கற்சிலைமடு தியாக தீபம் திலீபன் மருத்துவமனை சிறந்த சேவையை மக்களுக்கு அள்ளி வழங்குகிறது. இரவு, பகல் பாராது இன்முகத்துடன், சலிப்படையாது இச்சேவையை மருத்துவர் உட்பட உதவியாளர்கள் அனைவரும் செய்துவருகின்றனர். இதனால் அரச வைத்திய நிலையங்களைவிட அதிகமான மக்கள் இம்மருத்துவமனையிலே சிகிச்சைபெற்று வருகிறார்கள்.

ஆரம்பத்தில் சிகிச்சைக்கான குளிசை வகைகளைக் கொடுத்து வந்து படிப்படியாக வளர்ந்து தற்போது 'சேலன்' ஏற்றுவது முதல் ஊசிமருந்துகளை ஏற்றி மேலதிக சிகிச்சைகளும் இங்குநடைபெற்று வருகின்றன.

தற்போதுள்ள மருத்துவர் முதலுதவி அணியினரை ஏற்படுத்தி பயிற்சிகள் அளித்துத் தன்னோடு இணைத்து மக்களுக்குப் பேருதவி அளித்துவருவதுடன் படித்த இளைஞர், யுவதிகளுக்குத் தொடர்ந்தும் பயிற்சி வகுப்புக்களை உருவாக்கி பயிற்சிகளைக் கொடுத்து பல முதலுதவியாளர்களை உருவாக்கிவருவதும் மக்கள் தொழில் வாய்ப்பைப் பெற உதவியாகவுள்ளது.

அதுமட்டுமல்ல நடமாடும் சேவைகள் மேலும் வீடுவீடாகச்சென்று சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை ஏற்படுத்தி மக்களை விழிப்படையச் செய்து சுகாதாரத்தைக் கடைப்பிடிக்க உதவுவதும் இம்மருத்துவரின் மேலான சிறப்பம்சமாகும்.

தேசியத் தலைவரின் பரந்த நோக்கினால் நோயாளர் காவுவண்டிகளை அன்பளிப்புச் செய்தமை மக்களுக்கு மேலும் சிறந்த பயன் அளித்துள்ளது. அத்துடன், பல உயிர்கள் காப்பாற்றப்படுகிறது. மேலும் இம்மருத்துவமனை நோயாளர் விடுதிகளை உள்ளடக்கி விரிவுபடுத்தப்படவேண்டும். சிறப்பு மருத்துவர்கள் வருகைதரும்போது அவர்கள் குறைந்தது ஒருகிழமையாவது தங்கிச் சிகிச்சை அளிக்கவேண்டும். இதற்கு வசதியாக விடுதிகள் அமைக்கப்படவேண்டும்.

மேலாக ஒவ்வொரு கிராமத்திலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளமையால் அத்தக்கிராமத்திலே சிறுவர், பெரியோர் முதல் கர்ப்பிணிப் பெண்கள் உட்பட அனைவரும் சிரமமின்றி மருத்துவ வசதிகளைப் பெற்றுவருகின்றனர். ★

**இ.தனபாலசிங்கம்**
*ஒட்டுசுட்டான் செய்தியாளர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1st in Com., G.A.Q. (வெளிவாரி)

- A/Lஇல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகளில் மூன்று பாடங்கள் சித்தியடைந்தவர்களும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர்.
- பேராதனை பல்கலைக்கழகத்தின் பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- புதிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பம் 05.08.2006 காலை 8 மணி.

விவரங்களுக்கு:
S.அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(52848) (39.19.15)



### சைவவித்தியா விருத்திச்சங்கம்

## பொது முகாமையாளர் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி க.பொ.த.(உ/த) அல்லது சமமான தகைமையுடன் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் ஒன்றில் 10 வருடங்களுக்கு குறையாத அனுபவம், தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் தேர்ச்சிபெற்றவராகவும் கடிதத் தொடர்பு கொள்ளக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். ஓய்வுபெற்ற, தேகாரோக்கியமுள்ள, அரச/ கூட்டுத்தாபன அலுவலர்களும் அதிபர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய திகதி: 15.08.2006.

சைவவித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

திரு.சு.பசுபதி
செயலாளர்.

(சி/50610)(39.15.19.26)



## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கடமையாற்றும்
வேலை நிர்மாண அத்தியட்சகர் திரு.சி.மகேந்தின்
அவர்களின் அன்புத்தந்தை

**ஏரம்பு சிவசுப்பிரமணியம்**

அமரத்துவம் அடைந்தமைக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரும்,
உத்தியோகத்தர்களும்,
யாழ்ப்பாணம்.

(52874)(26.19.15)



மறைந்தும் மறையாத பெருந்தகைக்கு எங்கள்

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.போதனா
வைத்தியசாலையின்
பிரபல சத்திரசிகிச்சை
நிபுணர்
சு.ரவிராஜ்
அவர்களின்
தந்தை
வைத்திய கலாநிதி

**க.சுப்பிரமணியம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.பேபி நீட்ஸ் சக சன்றைஸ்
கிளினிக் உரிமையாளர்களும்,
ஊழியர்களும்.

(52876)(26.19.15)



## 14 ஆம் ஆண்டு நீங்காத நினைவலையில்...

உருவாய்
19 . 07 . 1982



அருவாய்
06 . 08 . 1992

## செல்வி சர்விழி தம்பிராசா

ஆண்டுகள் பதினான்கு சென்றாலும்
எம் அன்புக் கிளியே.....
உன் மழலைச் சிரிப்பும் பேச்சும்
எங்கள் காதுகளில் என்றும் தித்திக்கும்.

கோட்டைக்காடு,
மல்லாகம்.

விழி சொரியும்:
குடும்பத்தினர்.

(52856)(39.19.15.26)


## இரணை இலுப்பைக்குளத்தில் குடும்பப்பெண் சுட்டுக்கொலை

வவுனியா, ஓக.3

வவுனியா தெற்கு இரணை இலுப்பைக் குளம் பகுதியில் இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் தமிழ்க் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் காயமடைந்தனர். நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

அதிகாலைவேளை அந்தப் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் கொள்ளையடிக்க வந்த கொள்ளையர்களே குறித்த வீட்டுக்காரப் பெண் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த இருவரும் அனுராதபுர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். உயிரிழந்த பெண்ணின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருக்கின்றது.

## அக்கரைப்பற்றிலும் இளைஞர் கொலை

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் நேற்றுமுன்தினம் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அக்கரைப்பற்று சகமம் வீதியில் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் 'லான்ட் மாஸ்ரர்' வாகனத்தை ஓட்டிச் சென்றுகொண்டிருந்த போதே இந்த இளைஞர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைக்கு சமீபமாக உள்ள நலன்புரி நிலையம் ஒன்றில் வசித்து வந்தவரான ஞானசேகரம் மோகதாஸன் (வயது - 18) என்ற இளைஞரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டார் என்று அடையாளம் காணப்பட்டிருக்கிறது. இந்தக் கொலை குறித்து அக்கரைப்பற்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (க)

## திருமலையில் வாலிபர் கொலை

திருகோணமலை, அபயபுரம் கண்டி வீதியில் கடந்த திங்கள் இரவு 10 மணியளவில் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கலியுகநாதன் கீதாஞ்சன் (வயது -28) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

திருகோணமலை, அபயபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட இவர் மிஹிந்தபுரவில் உள்ள சிங்கள நண்பர்களின் அழைப்பின் பேரில் அங்கு சென்று விருந்துபசாரத்தில் கலந்துவிட்டு வீடு திரும்பும்போதே சுட்டுக் கொல்லப்பட்டார் என உப்புவெளிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ தினம் இரவு 8 மணிக்கு இவரை நண்பர்கள் விருந்துக்கு அழைத்துச் சென்றனர் என்றும் கொல்லப்பட்டவ்ரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக உப்புவெளிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-07)


ஸ்ரீராம ஜெயம்



யாழ்.வண்ணை

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

## ஸ்ரீவரலக்ஷ்மி விரத உற்சவ விழா

(04.08.2006- வெள்ளிக்கிழமை)

*செந்தாமரையாளே செல்வங்கள் அத்தனையும்*
*தந்தாளவல்ல தயாதேவி- எம் தாயாய்*
*இன்பமே நல்கும் இலக்குமியே - எங்கட்கு உன்*
*மன்னருளை என்றும் வழங்கு*

மெய்யடியார்களே,

சகல செல்வங்களையும் வாரிவழங்கும் அன்னை ஸ்ரீ மஹாலக்ஷ்மி தாயாரின் சிறப்பான விரதமான ஸ்ரீ வரலக்ஷ்மி விரதத்தை முன்னிட்டு நிகழும் மங்கலம்மிகு விய வருஷம் ஆடி மாதம் 19 ஆம் நாள் (04.08.2006) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஸ்ரீ மஹாலக்ஷ்மி அம்பாளுக்கு நவகலச அபிஷேக ஆராதனையும், அர்ச்சனையும் நடைபெற்று 10.30 மணிக்கு விசேட தீபாராதனை நிகழும். தொடர்ந்து அம்பாள் பத்மாஸனத்தில் திருவீதியுலா வருவார். உற்ஸவம் நிறைவுற்றதும் அடியார்களுக்கு நோன்பு நூல் வழங்கப்படும். அனைவரும் இவ்விழாவில் பங்குபற்றி ஸ்ரீ மஹாலக்ஷ்மி தாயாரின் திருவருளினால் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழ்வீர்களாக.

- ஆதீன மஹாசபை.

(சி.50605) (39.19.15)



உ
சிவமயம்
ௐ

## ஷஷ்டியப்த பூர்த்தி விழா அழைப்பு



அன்புடையீர்,

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும்
மங்களகரமான விய வருடம்
ஆடி மாதம் 19 ஆம் நாள்
வெள்ளிக்கிழமை (04.08.2006)
சுக்கிரவாரம், தசமி திதி அனுஷ
நட்சத்திரத்தில்
யா/சண்டிலிப்பாய் சீரணி
நாகபூஷணி அம்பாள்
தேவஸ்தான பிரதமகுரு
வேதசிவாகம சிரோன்மணி,
பிரதிஷ்டா பூஷணம்
சிவஸ்ரீ சி.பாலஷண்முக குருக்கள்
ஸ்ரீமதி கமலேஸ்வரி தம்பதிகளின்
ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி
வைபவம்,
ஸ்ரீ சீரணி நாகபூஷணி
அம்பாள் தேவஸ்தானம்,
சண்டிலிப்பாய் ஆலய
மண்டபத்தில்

செய்ய அம்பிகை திருவருள் கூடியிருப்பதால், அத்தருணம் தாங்களும் தங்கள் பந்துமித்திரர்களுடன் வந்திருந்து சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

சுபம்

பிள்ளைகளும், சகோதர சகோதரிகளும்.

(52831) (39.19.26)



## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் வாழைச்சேனை,
மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் டிஷோ வைன்ஸ்ரோஸ்
(கொம்மாந்துறை) உரிமையாளருமான

**அமரர் ஐயாத்துரை நிர்மலகுமாரன்**

பிறப்பு
13 - 12 - 1954



இறப்பு
20 - 06 - 2006

எங்கள் அன்பு அப்பா - இனி
அப்பான்னு அழைக்க யாருமில்லை அப்பா!
தனியாக எங்களை தடுமாற விட்டு
விட்டுப் போயிட்டீர்களே அப்பா!

பல நாள் உங்கள் முகம் காணாத
எங்கள் முகம் யார் காண்பார்கள் - அப்பா!
பாசத்தின் நேசம் நிலைக்காமல்
நினைவுகளாய் என்றும் மலர்கின்றன அப்பா!

G.P.S.Road,
கல்வியங்காடு.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(52804) (39.19.26)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் திருமுறைப் பெருவிழா

யாழ்ப்பாணம்,ஓக.3

நல்லூரில் எதிர்வரும் 9ஆம் திகதி திருமுறைப் பெருவிழா நடைபெறவுள்ளது.

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வருடந்தோறும் வைகாசி மற்றும் ஆடி மாதங்களில் வரும் பூரணைத்தினத்தில் ஞானநூல்களுக்கு பூசை, வழிபாடு ஆற்றி பெருவிழா எடுத்து வருகிறது.

இதன்படி எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணி முதல் திருமுறைப் பெருவிழா நல்லூர் சிவன்கோயிலில் நடைபெறவுள்ளது. அகில இலங்கைத் திருமுறை மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

நல்லை ஆதீன இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் அருளாசியோடு ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வுக்கு மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமை வகிப்பார். யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட இசைத் துறைத் தலைவர் செல்வி பாக்கியலட்சுமி நடராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். யாழ்.பல் கலைக்கழக சமஸ்கிருத சிரேஷ்ட விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்த சர்மா சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். அகில இலங்கைத் திருமுறைமன்ற தேவாரப் பண்ணிசை மாணவர்களின் திருமுறைப் பண்ணிசை நிகழ்வும் இடம்பெறும்.

நிகழ்வில் திருமுறை இசை வல்லார் செல்வி ஜனனி நல்லைநாதன் கௌரவிக்கப்படுவார். சமயகுரவர் நால்வர், பன்னிரு திருமுறை நூல்களுக்கு விசேட வழிபாடும் அன்னதானமும் நடைபெறவுள்ளன.

# சமாதானம் வேண்டி மருதடியில் வழிபாடு

மானிப்பாய்,ஓக.3

நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ வேண்டி மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி விசேட பிரார்த்தனை வழிபாடு இடம்பெறவுள்ளது.

பண்ணிசை ஆசிரியை திருமதி மலர்விழி கனகசபை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'ஆத்ம ஜோதி' ஆசிரியர் நா.முருகையா, வலிகாமம் இந்து சமய அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் ஆகியோர் பங்கேற்பர்.

இந்த நிகழ்வில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட சமயப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கலும், இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சீருடை வழங்கலும் இடம்பெறுமென சமூகஜோதி கா.கணேசதாசன் தெரிவித்தார். (90)



# சாயி சிந்தனை

## எம்மதமும் சம்மதமே

*மனித வாழ்க்கையில் உள்ள வேறுபாடுகளைக் களைந்து அவர்களிடையே ஒற்றுமையை உருவாக்கி தலைசிறந்த சமுதாயமாக மாற்றுவதே மதங்களின் நோக்கம் என்ற சத்தியத்தை உணர்ந்து -புரிந்து கொள்வதே ஒவ்வொருவரினதும் கடமையாகும்.*

*அனைத்து மதங்களின் சாரமும், அனைத்துப் புனித நூல்களின் மூலமும் அனைவரும் கடைசியில் அடையவேண்டிய இலக்கு ஒன்றே. ஆனால், மனிதன் தன் சுயநலத்தினாலும், குறுகிய நோக்கினாலும் மதத்தைக் கருவியாகக் கொண்டு கலகத்திலும் சண்டைகளிலும் ஈடுபடுகின்றான்.*

*எல்லா மதங்களும் நல்லவற்றையே போதிக்கின்றன. நாம்தான் நல்லறிவுடன் நடந்துகொள்ளவேண்டும். நம் மனம் நல்லதாய் இருந்தால் எந்த மதமும் நன்மை தரும். எல்லா மதங்களுக்கும் ஆதாரமான முக்கிய தத்துவங்கள் ஒழுக்கம், தானம், தர்மம், சத்யம், பாரம்பரியக் கலாசாரம், சகிப்புத்தன்மை மற்றும் அகிம்சை முதலானவை. இத்தகைய உண்மைகளை எல்லா மதங்களும் அங்கீகரிக்கின்றன. ஆனால், பண்டைக்காலத்திலிருந்தே இந்த ஒற்றுமைகளை மறந்துவிட்டு வேறுபாடுகளையே நினைத்து மதங்கள் வளர்ந்து வந்திருப்பதனால் மனித குணநலங்களே மறைந்துபோய்விட்டன.*

*மனித வாழ்க்கையில் தெய்வீகத்தில் இருக்கும் ஒற்றுமையைப் புரிந்துகொள்ள் வேண்டியது மிகவும் அவசியம்.*



**இலங்கை வங்கியின் 67 ஆவது ஆண்டு சேவை பூர்த்தியை முன்னிட்டு மல்லாகம் சந்தியருகே உள்ள காங்கேசன்துறைக் கிளையில் வாடிக்கையாளர் கௌரவிப்பு அண்மையில் இடம்பெற்றது.**

**மல்லாகம் வர்த்தகப் பிரமுகர் எஸ்.கே.லங்காமதி நிகழ்வின் ஆரம்பத்தில் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.**

**கிளைமுகாமையாளர் கே.இராசேந்திரா, வங்கி ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் படத்தில் காணப்படுகின்றனர்.** *(படம்: நேசன்)*

# நூல் அறிமுக விழா

கைதடி,ஓக.3

மாவீரர் ஈழராசனின் 'விழுதொன்றின் குரல்' அல்லது ' மனிதப் புரிதல்' என்ற நூலின் அறிமுகவிழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பளை மத்திய கல்லூரியில் யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூல் ஆய்வுரையை தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் கனகலிங்கமும் வாழ்த்துரையை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும் நிகழ்த்தவுள்ளனர். மதிப்பீட்டுரைகளை தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்த கை.கவியன்பனும் தூயவன் அரசறிவியற் கல்லூரி முதல்வர் அரசண்ணாவும் வழங்கவுள்ளனர். (75)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர்,ஓக.3

நல்லூர் உற்சவ கால ஐந்தாம் நாளான இன்று வியாழக்கிழமை இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினரால் நாவலர் மணிமண்டபத்தில் கிரியைகள் உணர்த்தும் 'தத்துவங்கள்' என்ற பொருளில் சைவப் புலவர் பரமேஸ்வரனின் சிறப்புரையும் பன்னாலை தெல்லிப்பழை கணேசா அறநெறிப் பாடசாலை, உரும்பிராய் திருக்குமரன் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். (203-111)

# சிங்களப் பரீட்சை

முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கடந்த ஆண்டு அரச அலுவலர்களுக்கு நடைபெற்ற அடிப்படை சிங்கள மொழிப் பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான பரீட்சை எதிர்வரும்12 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருப்பதாக யாழ்ப்பாண பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் அடிப்படைச்சிங்கள மொழிப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடையாத அரச அலுவலர்களும் இப் பரீட்சைக்கு தோற்ற முடியும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (75)

# சமய சந்நிதிகளில்

சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி பிற்பகல் 5.30 மணிக்கு நற்கருணை திருவிழாவும் மறுநாள் காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலி பூசையும், தொடர்ந்து திருச் சொரூப பவனியும் நடைபெறவுள்ளது. (135)

✱ ✱ ✱

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பன்னிரண்டு தினங்கள் இடம்பெறவுள்ள உற்சவத்தில் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 8.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)

# சுழிபுரம் ஆலயத்திற்கு கூரை இடும் பணி

சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலய உட்பிரகார மண்டபத்துக்கு கூரை இடும் பணி சிரமதான அடிப்படையில் இடம்பெற்றது. அப்பகுதியைச் சேர்ந்த வாலிபர்கள் இத்திருப் பணியில் ஈடுபட்டனர். ஆலயத்தின் வீதி விஸ்தரிப்புப் பணியும் நடைபெறுகின்றது.


கோயில் மடப்பணி புனரமைப்பும் நடைபெற்று வருகிறது. (28)

# பாடசாலை வளாகம் துப்புரவு

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை வளாகம் உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. பாடசாலை விளையாட்டு மைதானமும் துப்புரவு செய்யப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளதாக பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (135)

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

## 5ஆம் திருவிழா



## வந்திருந்தான் கேட்பீர் வரம்

*நேரிசை வெண்பா*

வீர னெனவுதித்தான் விண்ணோர் தமக் காகச்
சூரனையே வென்ற சுடர்வேலான் - வாரமுடன்
செந்தமிழர் தெய்வமாய் சீராய் நல் லூரிலே
வந்திருந்தான் கேட்பீர் வரம்.

*முதுபெரும்புலவர்* - **வை.க.சிற்றம்பலவாணர்.**

## கந்தையா எங்களை நீ கா!

**நல்லைத் திருநகரில் நாயகனே நாட்டவர்கள்**
**அல்லல் அகற்றவந்த அற்புதனே - சொல்வதற்கு**
**சிந்தை கலங்குதையா செந்தமிழர்க் குற்றதுயர்**
**கந்தையா எங்களை நீ கா.**

**ஒன்றுபடா தேமனிதர் ஓய்வீலராய்த் தங்களைத்தாம்**
**கொன்று குவிப்பதுவோ கூர்வேலா - அன்றொருநாள்**
**தந்தைக்கு மந்திரஞ்சொல் தத்துவனே நல்லைநகர்க்**
**கந்தையா எங்களை நீ கா.**

**-வ.சின்னப்பா.**

## அசைந்துவரும் முருகன்

*அப்பனுக்கு உபதேசம்*
*அளந்து செப்பிய முருகன்*
*அவ்வைக்குச்சுட்டபழம்*
*அறிவித்த பாலன் முருகன்*
*அவுணரைக் காத்திட*
*அசுரனை அழித்தமுருகன்*
*அடியார்கள் வளம்பெற*
*அருள் பொழிந்திடும்முருகன்*
*அரிவையர் போற்றிடும்*
*அலங்காரத் தெய்வம் முருகன்*
*அவனிதனில் தமிழோங்கிட -நல்லையில்*
*அசைந்து வரு முருகன்.*

**-நயினை விஜயன்.**

## *நல்லூர் பெற்றெடுத்த அழகே*

'முருகா முத்துக் குமரா - கந்தா
எங்கள் கார்த்திகேயா

நல்லூர் பெற்றெடுத்த அழகே - எங்கள்
அன்பிற்கினிய முத்தே

கொடியேறி அருளை ஈர்ப்பாய் - கோடி
அன்பர் கேட்கக் கொடுப்பாய்
ஓம் என்ற மந்திரத்தை உடையாய் - உனக்கு
நாம் சொல்ல வேண்டுமோ முருகா!

உன் பார்வை பட்டாலே போதும் - உன்
அருளெல்லாம் வந்துவிடும் எமக்கு
நீயிருக்க வேறென்ன வேண்டும் - எம்
செல்வமெல்லாம் நீதானே முருகா!

**- மலர் சின்னையா.**

## *தீர்வொன்று தந்தெம் நலங்காப்பாய்ஆறுமுகா!*

அலங்காரக் கந்தனென நல்லைநகர் மீதினிலே
அழகுமிகும் ஆலயத்தில் அமர்ந்திருக்கும் - கந்தவேளே
பலங்கொண்டு போரிட்ட சூரன்தனை வதைத்தே
அமரர்தமைச் சிறைமீட்டு அபயந் தந்தவனே!
கலங்குகின்ற நெஞ்சமுடன் நாமிருப்பது அறியாயோ?
கார்த்திகேயா! காசினிக்குத் தகுந்ததொரு தீர்வுதந்தெம்
நலங்காக்கத் திருவுள்ளம் கொண்டருள்வாய் என்றேநாம்
நாடி உனைத் தொழுகின்றோம் நாராயண மருகனே!

**-நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்.**

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

திருமண அழைப்பிதழ்கள்,
கேக் பொக்ஸ் (CAKE BOX)
பரிசுப் பொருள்கள் மற்றும் தரமான
அச்சு வேலைகளுக்கும்

கஜசங்கவி சென்ரர் & பிறிண்டேர்ஸ்

இல.237, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 222 7885

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Vespa (இத்தாலி) தயாரிப்பு New மொடல் 200-C எலற்றோனிக் ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. சந்திக்கும் நேரம் பி.ப.3 மணி தொடக்கம் 5 மணிவரை. இல.26, சீனி வாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (52808)

## மணமகள் தேவை

1975, இந்து கௌரவ குடும்பம், செவ்வாய் தோஷமுள்ள, 30 பாவம் உடைய தனியாக தொழில்புரியும் மணமகனுக்கு செவ்வாய் தோஷமுள்ள மணமகள் தேவை. மே/பா 2920, உதயன். (52809)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1974, றோகிணி, 7இல் செவ்வாய், கிரகபாவம் 60, அரச திணைக்களத்தில் நற்பதவி வகிக்கும் பட்டதாரி பெண்ணுக்கு தகுந்த வரன் தேவை. தொடர்பு: த.சிதம்பரப்பிள்ளை, சங்கத்தானை, சாவகச்சேரி. (சி/50612)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் குடியுரிமையுள்ள உத்தரம், முதலாம் பாதம், **26¾** கிரக பாவமும் 5'3'' உயரமுள்ள பெண்ணுக்கு **(B.Com., CIMA Accountant)** படித்த டாக்டர், என்ஜினியர், பட்டதாரிகள் இலங்கையில் அல்லது லண்டன், கனடா, ஆஸ்திரேலியாபோன்ற நாட்டில் இருந்தால் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: சிந்துஷன், 0776184434 (52888)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஆஸ்திரேலியாவில் குடியுரிமையுள்ள பாழ். வரவுள்ள 1971ஆம் ஆண்டு பிறந்த, ... நட்சத்திரமும் 5'4'' உயரமும் சற்றுப் ...ருமனான, 32 கிரக பாவமுள்ள பெண்ணுக்கு **(Bachelor of Technology, Chemical Engineering)** பட்டதாரி ஆங்கில அறிவுள்ள கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகன் தேவை. தொடர்புகளுக்கு: சிந்துஷன், 0776184434 (52887)

## தவறிவிட்டது

வேலணை கிழக்கைச் சேர்ந்த கோபால பிள்ளை ரமேஸ்தாசன் என்பவருடைய வாகன அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம், வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதி என்பன நல்லூருக்கும் வல்லை பாலத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் T.P 077 6622175 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (52879)

உரும்பிராய் மேற்கு, உரும்பிராயைச் சேர்ந்த கிறிஸ்துராசா றொபின்சன் என்பவருடைய தே.அ.அ (820183240V) நல்லூர் ஆலயச் சூழலில் 30.07.2006 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரியில் ஒப்படைக்கவும். நல்லூர் பொது நூலகம், நல்லூர். (52882)

சுதுமலை தெற்கு, மானிப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த சிறில் ராஜபேட் என்பவரது தேசிய அ.அட்டை (740741958V), சாரதி அனுமதிப்பத்திரம், **Commercial Bank Card** என்பன அடங்கிய பேர்ஸ் 30.07.2006 அன்று கச்சேரிக்கும் தபாலகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். T.P 077 3223100 (52886)

## வீடு வாடகைக்கு

பழைய பூங்கா வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: S.S.மரியதாஸ், 32/16, அச்சக வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 0212226266. (52871)

கோண்டாவில் மேற்கு, ஸ்ரேசன் வீதி, உப்புமடம் சந்திக்கு அண்மையில் நல்ல சூழலில் வசதியான வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 077 9798181. (சி/50627)




நாம் வடபகுதிக்கான HP (Hawlett Packard)யின் Dealears ஆகப் பதிவு பெற்றுள்ளோம். Original Toner, Cartridge என்பவற்றை நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

STP Your Partner in IT Solutions
73, Palaly Road, Kantharmadam. Jaffna./ 595, KKS Road, Jaffna. T.P:2222674


## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலராகக் கடமையாற்றும்
திருமதி **எஸ்.தவலீலா** அவர்களின் அன்புத் தாய்
**தளையசிங்கம் சந்திரலீலா (மணி அன்ரி)**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள**
(52872) **உதவி ஆணையாளர்கள் - அலுவலர்கள்.**

## தமிழீழ மாவட்ட நீதிமன்று - யாழ்ப்பாணம்

வ.இல:- 29/06
தன்மை :- காணி
பெறுமதி:- 450000/=

வழக்காளி
அந்தோனிப்பிள்ளை யோசேப் சவுந்தரநாயகம்
அவரின் தத்துவகாரர்,
சவுந்தரநாயகம் மங்கயற்கரசி,
நாகலிங்கம் தெறஸ், மானிப்பாய்.

எதிர்

1) கே.அருட்சோதி,
23, கண்டி
2) மாறன் கந்தசாமி,
ரீ.சீ.லேன், மானிப்பாய்,

-எதிராளிகள்

### பகிரங்க அறிவித்தல்

மேற்குறித்த முதலாம் எதிராளிக்கு,

இவ்வழக்கானது வழக்காளியினால், இந்த நீதிமன்றில் உமக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டு, உமக்குரிய அழைப்புக் கட்டளை பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்டது. ஆனால் நீர் குறித்த அழைப்புக் கட்டளையை ஏற்று, மன்றில் தோன்றி சட்டப்படியான நடவடிக்கைகள் எதனையும் இதுவரைக்கும் எடுக்கவில்லை. இதனால் இப்பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது. இப்பகிரங்க அறிவித்தல் வெளியாகி 15 நாள்களுக்கிடையில் நீரோ அல்லது உமது நலனில் அக்கறை உடையவர்களோ மன்றில் தோன்றி, சட்டவழி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில், அழைப்புக் கட்டளை உமக்குச் சேர்ப்பித்ததாகக் கருதி, ஒருமுக விளக்கம் நடத்தப்பட்டு, தொடர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இத்தால் அறியத் தரப்படுகின்றது.

"இன்று 2006ஆம் ஆண்டு ஆடி மாதம் 31ஆம் திகதி"
"மன்றின் கட்டளைப்படி"

வரைபு:
வழக்காளி சட்டவாளர்,
தா.இ.குலசங்கர்,
இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.

பொ.சுப்பிரமணியம்,
பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
பளை (யாழ்ப்பாணம்).

(சி/50623)(32-19-45)

## வெளிக்கள அலுவலர் பதவி வெற்றிடம்

யாழ்.கல்வி வலயத்தில் யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் இயங்கிவரும் திட்டமிடல், கண்காணித்தல், மதிப்பிடுதல் பிரிவில் வலிகாமம் வலயத்தில் வெளிக்கள உத்தியோகத்தராகக் கடமை புரிவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் வசிப்பவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்றும் -

இது தொடர்பான மேலதிக விவரங்களை வலிகாமம் கல்வி வலயம், வலிகாமம் கோட்டக் கல்வி அலுவலகம் ஆகியவற்றில் பார்வையிடலாம் என்றும் யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். (203)

## கோழிக்குஞ்சுகள் விற்பனை

தென்மராட்சி,ஓக.3

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் நல்லின கோழிக் குஞ்சுகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

நல்லினக் கோழிக் குஞ்சுகளைப் பெற விரும்புவோர் அலுவலக நாள்களில் பெற்றுக்கொள்ளலாமென தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (117)

# கிழக்கில் நடைபெறும் மோதல் தண்ணீருக்காக ஏற்பட்டது அல்ல

## கண்காணிப்புக்குழுத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.3

கிழக்கில் இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் மோதல் உண்மையில் தண்ணீரிற்கான பிரச்சினையாக இருக்காது. அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காகவே விடுதலைப் புலிகள் மாவிலாறு அணைக்கட்டை மூடினர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன்

இது தொடர்பாக ஹென்றிக்சன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

வடக்கு - கிழக்கில் தற்போது நடைபெற்று வரும் மோதல்களுக்கு தண்ணீரே உண்மையான காரணமாக இருந்தால் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெற்றிருக்காது. கடற்புலிகளின் இலக்கந்தைத்தளம் தண்ணீருக்காகத் தாக்கப்படவில்லை.

விடுதலைப் புலிகளின் இலக்குக்ள் மீது தாக்குதலை மேற்கொள்வதற்கு அரசாங்கம் விமானப் படையை அனுப்பியுள்ளது. அரசாங்கம் இவ்வாறு செயற்படவேண்டும் என்றே விடுதலைப்புலிகள் எதிர்பார்த்தனர்.எனினும் தற்போதைய இராணுவ நடவடிக்கைகள் முழுமையான யுத்தத்தை உருவாக்கும் என நான் கருதவில்லை. இருதரப்பும் முழுமையான யுத்தத்திற்கு தயாராகவில்லை.

விடுதலைப்புலிகளின் விமானப்படை குறித்த அச்சம் அரசியல் ரீதியானது இராணுவ ரீதியானதல்ல. யுத்த நிறுத்த மீறல்கள் இடம்பெற்ற பகுதிகளிற்கு எங்கள் கண்காணிப்பாளர்கள் செல்வதற்கு இருதரப்பும் அனுமதிக்கவில்லை. இருதரப்புக்கும் என்ன நடைபெற்றது என்பது தெரியும் என்பதால் கண்காணிப்புக் குழுவின் அறிக்கைகள் அவசியமில்லை. ஹெப்பிட்டிக் கொல்லாவ தாக்குதலை புலிகள் மேற்கொண்டமைக்கான உறுதியான ஆதாரம் எதுவுமில்லை என்றார். (202)

### அரச படையினரால் முடியாவிட்டால்

# மாவிலாறு அணையைத் திறப்பதற்கு உயிரைக் கொடுக்கவும் தயாராம்

## ஹெல உறுமய தலைவர் கூறுகிறார்

கொழும்பு,ஓக.3

மாவிலாறு அணைக்கட்டைத் திறப்பதற்கு அரச படையினரால் முடியாவிட்டால் உயிரைக் கொடுத்தாவது திறப்பதற்கு ஹெல உறுமயவினர் தயாராக உள்ளோம்.

இவ்வாறு சூளுரைத்துள்ளார் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர். அவர் மேலும் கூறியதாவது:

விடுதலைப்புலிகள் மாவிலாறு அணையை மூடி பரம்பரையாக அந்தப் பிரதேசத்தில் வாழும் சிங்களவர்களை வெளியேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றனர். அந்த அணைக்கட்டைத் திறப்பதற்கு அரசாலும் அதன் படையினாலும் முடியாவிட்டால் எமது உயிரைக் கொடுத்தாவது திறப்போம். அந்தப் பிரதேச சிங்கள மக்கள் அணையைத் திறப்பதற்குத் தமது உயிரைக் கொடுக்கவும் தயாராக உள்ளனர். இதனை அரச சார்பற்ற நிறுவனங்கள் சர்வதேச சமூகத்திடம் எடுத்துச் சொல்ல வேண்டும் - என்றார் தேரர். (202)

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் விசேட பொதுக்கூட்டம்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மகோற்சவத்தை முன்னிட்டு பணிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளதால் எதிர்வரும் 06.08.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்கப் பணிமனையில் கூட்டம் நிகழ்ச்சி நிரலின்படி உரியநேரத்தில் நடைபெறும்.

சகல அங்கத்தவர்களும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**தலைவர்.** (சி/50621) (32-19-45) **இணைச்செயலாளர்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்கள் சுடப்படுவதை தடுக்க இந்தியா-இலங்கை இடையே ஒப்பந்தம்

## மத்திய அரசிடம் வலியுறுத்த தமிழக அரசு முடிவு

சென்னை,ஓக.3

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற் படையினரால் சுடப்படுவதைத் தடுக்க இந்தியா - இலங்கை இடையே ஒப்பந்தம் ஏற்படுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கு மாறு மத்திய அரசை தமிழக அரசு வலியு றுத்தும் என்று சட்டப்பேரவையில் நிதி யமைச்சர் அன்பழகன் தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத் திற்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற் படையினர் சுடுவதைத் தடுக்கவும் மீனவர் களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். மீன்பிடிக்கும்போது அறியா மல் மீனவர்கள் எல்லை தாண்டிச் சென்றா லும் அவர்களைக் கைது செய்து இந்தியா விடமே ஒப்படைக்கும் வகையில் இலங்கை -இந்தியா இடையே இருதரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்த மத்திய அரசை வலியுறுத்துவோம்.

புதிய தொழில் கொள்கை விரைவில் அறிவிக்கப்படும். தொழில் வளர்ச்சிக்கு ஏதுவாக சிறப்புதொழில் பெருவழிச்சாலை அமைக்கப்படும். இந்த சிறப்பு பெருவழிச் சாலை உலகத் தரம் வாய்ந்ததாக இருக்கும். பின் தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் முதலீட்டு மானிய சலுகைத் திட்டம் மீண்டும் வழங்கப்படும்.

வேலை வாய்ப்பைப் பெருக்கும் தொலை நோக்குத் திட்டத்திற்கு முக்கியத்துவம் இல்லை என்று உறுப்பினர் விஜயகாந் கூறினார். விப்ரோ, இன்போஸிஸ் தொழிற் சாலைகள் அமைக்கப்படுவதன் மூலம் புதிதாக 25 ஆயிரம் மென்பொருள் பொறி யியலாளர்களுக்கு வேலை கிடைக்கும். மேலும் தகவல் தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் புதிய தொழில்நுட்பக் கொள்கை அறிவிக்கப் படும். சென்னையில் இரண்டாவது டைடல் தொழில் பூங்காவும் கோவையில் டைடல் தொழில் பூங்காவும் அமைக்கப்படும். கம்பி யூட்டர் தொழிற்சாலைக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கும் திட்டம் அறிவிக்கப்பட் டுள்ளது. இதனால் கணனி தொழிற்சாலை கள் பெருகும். அதன்மூலம் புதியவேலை வாய்ப்புகள் ஏற்படும். வேலை நியமனத் தடைச் சட்டம் விலக்கிக் கொள்ளப்படுவதால் அரசுப் பணியிடங்களில் காலியாக உள்ள இடங்கள் நிரப்பப்படும்-என்றார். (8)

### புலிகள் உட்பட 32 அமைப்புகளுக்கு இந்தியாவில் தொடர்ந்தும் தடை!

புதுடில்லி,ஓக.3

சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின்படி விடுதலைப்புலிகள், அல்-கெய்டா லஷ்கர்-இ.தொய்பா, கெய்ஷ்-இ. முகம்மது, ஹிஸ்புல்-முஜாகிதீன் உள்ளிட்ட 32 அமைப்புகளுக்குத் தொடர்ந்து தடை விதிக்கப்பட்டுள்ளது என மத்திய உள்துறை இணை அமைச்சர் ஸ்ரீபிரகாஷ் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

இதுகுறித்து மக்களவையில் அவர் நேற்றுமுன்தினம் கூறியதாவது:-

இந்தியாவில் உள்ள தீவிரவாத அமைப் புகளுக்கு வெளிநாடுகளிலிருந்து பல வழி களில் நிதி உதவிகள் வருகின்றன. பாபர் கல்சா இன்டர்நேஷனல், காலிஸ்தான் கொமாண்டோ படை, காலிஸ்தான் ஜிந்தா பாத் படை, ஹர்கத் - உல் - முஜாகிதீன், உல்பா, போடோலாந்து தேசிய ஜனநாயக முன் னணி, தமிழீழ விடுதலைப்புலிகள், சிமி, சிபிஐ-எம்எல், ஜமாத்-உல்முஜாகிதீன் போன்றவைகளும் தடைசெய்யப்பட்ட அமைப்புகள் - என்றார் அவர். (8)

# நேபாள மன்னருக்குப் பிறக்கும் பெண் குழந்தைக்கும் அரசுரிமை

## புதிய சட்டம் தயாராகிறது!

காத்மாண்டு,ஓக.3

நேபாள நாட்டில் மன்னருக்குப் பிறக்கும் முதல் குழந்தை ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அரச வாரிசாக வும், பின்னர் நாட்டின் தலைவராகவும் நிய மிக்கப்பட சட்டம் திருத்தப்படுகிறது.

இப்புதிய சட்டத்தின்படி இளவரசி பூர் ணிகா அடுத்து நேபாள நாட்டின் தலைவரா வார். இவர் பட்டத்து இளவரசர் பரஸ் என் பவரின் மூத்த மகள். இதுவரை நேபாளத்தில் ஆண் வாரிசுதான் பட்டத்துக்கு வர முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.


மன்னர் வீரேந்திரர், ராணி ஐஸ்வர்யா ஆகியோரை அவர்களுடைய மகனே சுட் டுக் கொன்று தானும் தற்கொலை செய்து கொண்டதால் வீரேந்திரரின் தம்பி ஞானேந் திரர் மன்னராக முடிசூட நேர்ந்தது. இவரை யும் இவருடைய மகனையும் நேபாளமக்கள் வெறுக்கத் தொடங்கினார்கள்.

இதன் பிறகு, மன்னரின் அடக்குமுறை ஆட்சிக்கு முடிவுகட்டப்பட்டது. முடக்கி வைக்கப்பட்டிருந்த நாடாளுமன்றத்துக்கு மீண்டும் உயிர்கொடுக்கப்பட்டது. புதிய அரசு ஏற்பட்டது. அந்தப் புதிய அரசு மன்ன ரின் அதிகாரங்களை ஒவ்வொன்றாக நீக்கி வருகிறது. புதிய அரசியல் சட்டம் தயாராகி வருகிறது. மன்னரின் வாரிசை தேர்வு செய் யும் உரிமை அவரிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது.

அந்த வரிசையில் இப்போது, பட்டத் துக்கு ஆண் வாரிசுதான் வரவேண்டும் என்ற மரபு உடைக்கப்பட்டு, முதல் குழந்தை யாராக இருந்தாலும் பட்டம் ஏற்கலாம் என்று திருத்தப்படுகிறது.

அதேசமயம், முதல் குழந்தைக்குத் தகுதி உண்டு என்றாலும் உடனே தானாகவே அது பட்டத்துக்கு வந்துவிட முடியாது. பட்டம் ஏற்பது யார் என்பதைத் தேர்வுசெய்ய அரசி யல் சட்டப்படி குழு நியமிக்கப்படுகிறது. அதற்கு பிரதமர்தான் தலைவர். உச்சநீதி மன் றத்தின் தலைமை நீதிபதி, நாடாளுமன்றத் தின் சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் உறுப்பினர்கள். அடுத்து பட்டத் துக்கு வரவேண்டியவரை அந்தக்குழுதான் தேர்வுசெய்யும். (8)

## உலக அரங்கில்



அமெரிக்காவின் வெள்ளை மாளிகைக்குள் அத்துமீறி நுழைய முயன்ற இனந்தெரியாத நபர் ஒருவரை வெள்ளை மாளிகை பாதுகாப்புப் பிரிவினர் மடக்கிப் பிடிக் கும் காட்சி இது. இவர் எதற்காக வெள்ளை மாளிகைக்குள் நுழைய முயன்றார் என்பது தெரியவர வில்லை இதற்கான விசாரணைகளை வெள்ளைமாளி கைப் பொலீஸார் தீவிரமாக மேற் கொண்டு வருகின்றனர். இந்த நபரிடம் ஆபத்தை விளைவிக்கக் கூடிய ஆயுதங்கள் எதுவும் இருக்க் வில்லை எனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

# காஸ்ரோவின் உடல்நிலை பாதிப்பு ஆட்சிப்பொறுப்பு சகோதரனிடம்

ஹவானா,ஓக.3

சமீபத்தில் மேற்கொண்ட அறுவைச் சிகிச்சை மற்றும் உடல்நிலை பாதிப்பு கார ணமாக தற்காலிகமாக நாட்டை ஆளும் பொறுப்பை தனது சகோதரரிடம் வழங்கி யுள்ளார் கியூபா அதிபர் பிடல் காஸ்ரோ. இத்தகவலை அவரது அந்தரங்கச் செய லாளர் அரசுத் தொலைக்காட்சியில் தோன்றி வாசித்தார்.

80 வயதான பிடல் காஸ்ரோ கடந்த சில மாதங்களாக தனது சுற்றுப் பயணத்தில் ஏராளமான நிகழ்ச்சிகளில் பங்குகொண் டார். இதனால் அவருடைய உடல் நிலை பாதிக்கப்பட்டது. மேலும் சமீபத்தில் அவ ருக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. இதன் காரணமாக தனது சகோதரரால் காஸ்ட் ரோவிடம் நாட்டின் நிர்வாகப் பொறுப்பை தற்காலிகமாக ஒப்படைத்துள்ளார்.

1959 ஆம் ஆண்டு கியூபா அதிபராக பதவியேற்றார். பிடல் காஸ்ரோ தனது நிர்வா கப்பொறுப்பை தற்போதுதான் முதன்முறை யாக அவர் மற் றொருவரிடம் ஒப்படைக்கி றார் என்பது குறிப்பிடத்தக் கது. அவரது சகோதரரால் காஸ்ரோ தற் போது கியூபா பாதுகாப்பு அமைச்சராக இருக்கிறார். அவருக்கு வயது 75. (8)



### ஐ.நாவின் கோரிக்கையை ஏற்காவிட்டால் ஈரான் மீது தடை

யுரேனியத்தை செறிவூட்டும் பணியை இம்மாதம் 31 ஆம் திகதிக்குள் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஐ.நா பாதுகாப்பு சபையின் கோரிக்கையை ஈரான் ஏற்கத் தவறினால் அந்நாட்டின் மீது தடைவிதிப் போம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

யுரேனியத்தை செறிவூட்டும் பணியை ஈரான் இம்மாதம் 31ஆம் திகதிக்குள் நிறுத்திக் கொள்ளவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை தீர் மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்நிலையில் அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் சீன் மெக்கார் மேக் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி யுள்ளதாவது

ஐ.நா பாதுகாப்புச் சபையின் கோரிக்கையை ஈரான் ஏற்கவில்லையென்றால், அமெரிக்கா மற் றும் ஏனைய உறுப்பு நாடுகள் ஒருங்கிணைந்து தடைவிதிக்கும் தீர்மானம் தொடர்பான நடவடிக்கையை மேற்கொள்ளும்.

ஒருங்கிணைப்பு மற்றும் பேச்சுவார்த்தை தொடர்வதற்கான உத்திகளை ஈரான் எடுக் கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். யுரேனியத்தை செறிவூட்டும் பணிகளை முழு வதுமாக நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளலாம் என்பதை மீண்டும் வலி யுறுத்திக் கூறுகின்றோம். எந்தவழியைத் தேர் தெடுப்பது என்பதை ஈரான்தான் முடிவு செய்ய வேண்டும்- என்று கூறியுள்ளார் அவர். (8)

# ஐ.நாவிலும் இஸ்ரேல் - லெபனான் மோதல்

நியூயோர்க், ஓக. 3

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் இஸ்ரேல், லெபனான் பிரதிநிதிகள் ஆவேசமாக மோதிக்கொண் டனர்.

லெபனானின் தெற்குப் பகுதியில் ஹிஸ் புல்லா தீவிரவாதிகளின் மறைவிடங்களைத் தாக்குவதாகக்கூறி இஸ்ரேலிய போர் விமா னங்கள் நடத்திய குண்டு வீச்சில் ஏராளமான குழந்தைகள் உட்பட 50 இற்கும் மேற்பட்ட சிவிலியன்கள் இறந்தது பற்றி இருவருக்கும் இடையே காரசாரமான வாக்குவாதம் நடந்தது.

லெபனான் வெளியுறவு அமைச்சர் தெரி விக்கையில்:-

லெபனான் மீது இஸ்ரேல் நடத்திவரும் இடைவிடாத தாக்குதல் கண்டிக்கத்தக்கது. கானா என்ற இடத்தில் ஏராளமான குழந்தை கள் உட்பட 50 இற்கும் மேற்பட்ட சிவிலி யன்கள் இஸ்ரேலின் குண்டு வீச்சில் இறந் தது தொடர்பாக சர்வதேச அளவில் விசார ணைக்குழு அமைத்து விசாரிக்கவேண்டும். வருத்தம் தெரிவிக்கின்றோம் என்ற வெற்று வார்த்தைகளால் பலன் ஏதுமில்லை.

தாக்குதலை இஸ்ரேல் உடனே நிறுத்த வேண்டும்.பாதிக்கப்பட்ட பகுதிகளில் மனி தாபிமான உதவிகளைச் செய்ய அனுமதிக்க வேண்டும். உடனடியாக அனைத்துவகை தாக்குதல்களையும் இஸ்ரேல் நிறுத்தவேண் டும். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் இஸ்ரேலும் லெபனானும் கைதிகளை பரிமாறிக்கொள்ளவேண்டும்.

இஸ்ரேலிய இராணுவம் நீலக்கோட்டுக் குப் பின்னால் பின்வாங்கவேண்டும். வீடு களை விட்டு வெளியேறிய மக்கள் மீண்டும் தங்கள் சொந்த ஊர்களுக்கு, வீடுகளுக்குத் திரும்ப அனுமதிக்கவேண்டும்.

எல்லைகளை நிர்ணயம் செய்து அவற் றின் மீது லெபனானின் இறையாண்மையை நிலைநாட்டும் வரையில் ஷாபா பண்ணை நிலங்கள் கபிர் சுபா மலைப்பகுதி ஆகிய வற்றை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப் புச் சபை தன்பொறுப்பில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

தெற்கு லெபனானில் உள்ள சர்வதேச அமைதிப் படையில் அதிகம் பேரை நிய மிக்கவேண்டும்.அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படவேண்டும். எல்லாவற்றையும் விட முக்கியம் அவர்களுக்கு போதிய அதிகா ரங்கள் தரப்படவேண்டும். அதன் மூலம் தான் மனிதாபிமான உதவிகளை மக்களுக் குச் செய்யமுடியும் - என்றார்.

ஐ.நாவுக்கான இஸ்ரேல் தூதர் டான் கிலர் மேன் தெரிவிக்கையில்:-

லெபனானில் செயல்படும் பயங்கரவாதி களை எப்படி ஒடுக்குவது என்பதை லெப னான்தான் தீர்மானிக்கவேண்டும். இப் போது அந்நாடு எல்லாவித பயங்கரவாதிக ளுக்கும் புகலிடமாக இருக்கிறது. நாங்கள் லெபனானைத் தாக்கவில்லை. தற்காப்பு நட வடிக்கையைத்தான் எடுத்திருக்கிறோம். ஹிஸ்புல்லா எங்களைத் தாக்கஅனுமதித்தது ஏன் என்பதை லெபனான்தான் விளக்கவேண்டும். எங்கள் நாட்டின் முழுப்பகுதியையும் லெபனான் எப்போது தன்னுடையகட்டுப் பாட்டில் கொண்டுவரப் போகிறது என்பது தான் எங்களுடைய கேள்வி - என்றார் .(8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்சவம் முடியும் வரை நல்லூர் பகுதியில் இரவு 8 மணிக்குப் பின்னரே மின்வெட்டு

யாழ்ப்பாணம்,ஓக.3

நல்லூர் பெருந்திருவிழா முடியும் வரை அப்பகுதியில் இரவு 8மணிக்குப் பின்னரே தினசரி மின்வெட்டை நடைமுறைப்படுத்த மின்சார சபை இணங்கியுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

கடந்த 30ஆம் திகதி நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பகல் கொடியேற்ற உற்சவம் நடைபெற்றது. அன்று மாலை உற்சவத்தின் போது வழமையான மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனால் ஆலயத்துக்கு வந்தவர்களும் அப்பகுதியில் கடை வைத்திருப்பவர்களும் பெரும் சிரமங்களை அடைந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டு நல்லூர் உற்சவ காலம் முடியும் வரை அப்பகுதியில் தினசரி மின் தடையை ஏற்படுத்த வேண்டாமென மின்சார சபையிடம் யாழ்.மாநகர சபை வேண்டுகோள் விடுத்தது.

இதன் அடிப்படையில் இரவி 8மணிக்கு பின்னர் மின் வெட்டை நடைமுறைப்படுத்த மின்சார சபை இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (13)

## அறிவுறுத்தல் கூட்டம்

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையின் போது கடமையாற்றும் வலிகாமம், வடமராட்சி ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் கிறிஸ்வக் கல்லூரியில் நடைபெறும்.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்திற்கு பரீட்சை இணைப்பாளர், உதவி இணைப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள் ஆகியோரேகலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1- 117)

## பேசித் தீர்க்குமாறு கோருகிறது சமாதானப் பேரவை

திருகோணமலை,மாவிலாறு நீர்ப்பாசன அணைக்கட்டு திறப்புப் பிரச்சினையை வன்முறை வழியை விடுத்து பேச்சு மூலம் சுமூகமாக தீர்ப்பதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் முன்வரவேண்டும் என்று இலங்கை சமாதானப் பேரவை அறிக்கையொன்றின் மூலம் அரசையும் விடுதலைப் புலிகளையும் கோரியுள்ளது.

பேசி சுமுகமாகத் தீர்வு காணப்பட்டிருக்க வேண்டிய இந்த தண்ணீர்ப்பிரச்சினை இன்று இராணுவ மோதலாக உருவெடுத்திருக்கிறது. பெரிய யுத்தமாக உருவாகும் அறிகுறிகளும் தென்படுகின்றன. இத்தகைய சூழ்நிலை உருவாவதை தடுப்பதற்கு நோர்வே அனுசரணையாளர்களும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் சர்வதேச சமூகமும் முன்வந்து உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும். அரசும், புலிகளும் இப்பிரச்சினையை பேசித்தீர்க்க முன்வர வேண்டும் என்றும் தேசிய சமாதானப் பேரவை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

### உப அதிபர் தாக்கப்பட்டதைக் கண்டித்து

## யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்கள் இரு தினங்கள் வகுப்புப் பகிஷ்கரிப்பு

யாழ். இந்துக்கல்லூரி உப அதிபர் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த சம்பவத்தைக் கண்டித்து கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் அப்பாடசாலை மாணவர்கள் வகுப்புகளை பகிஷ்கரித்தனர்.

திங்கட்கிழமையன்று குடாநாட்டின் அனைத்துப் பாடசாலை மாண வர்களும் வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர். அன்றைய தினமும் மறுநாளும் யாழ்.இந்துக்கல்லூரி மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அவ்வேளையில் கல்லூரி அமைந்துள்ள காங்கேசன் துறை வீதியின் குறுக்கே ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. இதனால் அந்த வீதியூடான போக்குவரத்து காலை 8 மணிமுதல் ஒரு மணி நேரம் தடைப்பட்டது.

நேற்று பாடசாலை வழமைபோல் இயங்கியதாகவும் மாணவர்கள் முழு எண்ணிக்கையில் சமுகமளித்தனர் என்றும் அதிபர் தெரிவித்தார். (111)

## கொழும்பில் கைதான இளைஞருக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக.3

கொழும்பு பான்பிளேஸ், கன்னங்கர மாவத்தையில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞரை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

கணேஷ் குகனேஸ்வரன் என்ற இளைஞரே ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரால் இவ்வாறு கைது செய்யப்பட்டு கறுவாத்தோட்டம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவர் தாம் வவுனியாவைச் சேர்ந்தவர் என்று தெரிவித்தார் என்றும், ஆனால், அவரது அடையாள அட்டையில் அவரது இடம் கிளிநொச்சி எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இவர் குறித்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரித்து வருவதால் இவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடுமாறு இவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்த பொலிஸார் தெரிவித்தனர். அதனையடுத்து சந்தேக நபரை விளக் கமறியலில் வைக்க மேலதிக நீதிவான் லால் பண்டார உத்தரவிட்டார்.

## மகியங்கனைப் பகுதியில் 3 கைக்குண்டுகள் மீட்பு

மகியங்கனை கிராந்துருக்கோட்டைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை மூன்று சக்திவாய்ந்த கைக்குண்டுகள் மீட்கப்பட்டதென மகியங்கனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மகியங்கனைக்கும், கிராந்துருக் கோட்டைக்கும் இடையில் அமைந்துள்ள பாலத்திற்கு அடியில் இருந்தே இம்மூன்று கைக்குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து அப்பகுதி பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவரும் கைது செய்யப்படவில்லை.

# வேற்றுக் கிரகக் குள்ள மனிதர்கள் தனமன்வில பகுதியில் நடமாட்டமா?

### உண்மையைக் கண்டறிய ஆராய்ச்சி நடக்கிறது

கொழும்பு, ஓக.3

காலி, தனமன்வில, நாகோடப் பகுதிகளில் கடந்த சில வாரங்களாக அடுத்தடுத்து பல அதிசயங்கள் நடைபெற்று வருவது கண்டு ஊர்ப் பெரியவர்கள் அதிசயிக்கின்றனர்.சென்ற வாரங்களுக்கு முன்னர் தனமன்வில நோபாடப் பகுதியில் மூன்று வேற்றுக் கிரக மனிதர்களின் நடமாட்டத்தை இனங் கண்டுள்ளனர். சென்ற வாரம் கிரிண்டிய ஆற்றுக் கரையோரம் பறக்கும் தட்டு ஒன்று வந்து விழுந்திருந்திருக்கிறது.

இந்த நூதன மனிதர்களை அல்லாது வேற்றுலக வாசிகளை நேரில் கண்டதாகத் தெரிவிக்கும் பாடசாலை மாணவன் தெரிவித்த தகவல்களையடுத்து பிரபஞ்ச ஜீரவாசிகள் குறித்து ஆராய்சி செய்துவரும் பிரபஞ்ச ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவர் டாக்டர் நிஸங்க விஜயதேவ, தனமன்விலப் பகுதிக்கு நேரில் சென்று இந்த வேற்றுலக மனிதர்கள் காணப்பட்ட இடங்களைப் பார்வையிட்டதுடன் நேரில் கண்டதாகக் கூறியோரையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்த நூதன மனிதர்கள் காணப்பட்ட இடங்களில் பதிவாகியிருந்த கால் சுவடுகளையும் பார்வையிட்டுப் படமும் பிடித்திருக்கிறார்.

இந்த வேற்றுக் கிரக மனிதர்களைக் கண்டதாகக் கூறும் எட்டாம் வகுப்பு மாணவன் சுரங்க, தான் கண்டதை பின்வருமாறு விவரித்திருக்கிறார்.

''நானும் பாட்டியும் என் சகோதரியும் சம்பவ தினம் மாலை வழமைபோல் ஆற்றில் நீராடிவிட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தோம். அப்பொழுது சந்தியில் மூன்று அடுப்புக்கரி நிறமான மூன்று குள்ள மனிதர்கள் நிற்பதைக் கண்டதுடன் அவர்களின் உயரம் இரண்டு அடி கூட இருக்காது. இந்த மூவரில் ஒருவர் மட்டும் சற்று உயரம் கூடியவராயிருந்தார். மூவரும் தொப்பி அணிந்திருந்தனர். இவர்களை நான் என் சகோதரிக்குக் காட்டினேன். நான் சகோதரிக்குக் காட்டியதைக் கண்ட அவர்கள் மூவரும் நொடிப் பொழுதில் காட்டுக்குள் ஓடிச்சென்று விட்டனர். அப்பொழுது நேரம் மாலை 6.30 மணியிருக்கும்.''

பள்ளி மாணவன் கண்ட இந்த நூதன மனித சஞ்சாரக் கதை ஊரெங்கும் காட்டுத்தீ போல் பரவியது. பலரும் இவர்கள் நடமாடிய இடத்துக்கு வந்து தரையில் பதித்த அடிச்சுவடுகளைப் பார்த்து வருகின்றனர்.

இந்தக் குள்ள மனிதர்கள் மறுநாளும் அப்பகுதிகளில் காணப்பட்டதாக வேறு சிலர் ஆராச்சியாளர்களிடம் கூறியிருக்கிறார்கள்.

ஆராய்ச்சியாளர்கள் கடந்த 25ஆம் திகதி இரு குழுக்களாகப் பிரிந்து குள்ள மனிதர்கள் ஓடி மறைந்த காட்டுக்குள் தேடிச் சென்றனர்.

-இவர்களின் அடிச் சுவட்டை அவதானித்தவாறு காட்டுக்குள் இவர்கள் போயிருக்கின்றனர். மணல் தரையில் கால் பாதங்கள் நன்கு பதிந்திருக்கின்றன. மூன்று விரல்களே மண்ணில் பதிவாகியிருக்கின்றன.

இந்த குள்ள மனிதர்களை முன்னர் கண்ட ஒருவர் இவர்கள் கைகளும் மூன்று விரல்களும் கொண்டிருந்ததாக ஆராய்ச்சிக் குழுவினரிடம் தெரிவித்திருக்கிறார்.

இவர்கள் யாரை யாவது உற்றுப் பார்த்ததால், பார்க்கப்பட்டவர் திடீரென மயங்கி வருகிறாராம்.

காட்டுக்குள் ஆராய்ச்சி செய்யப் போன கோஷ்டியினர் காட்டுக்குள் ஆங்காங்கே திடீர் திடீரென சலசலப்புக் கேட்கவே முயற்சியை இரவாகுமுன் ஒத்திவைத்து விட்டுத் திரும்பி விட்டனராம்.

மீண்டும் குள்ள மனிதர்களின் அரவம் ஊரில் தெரிந்தால் தகவல் தருமாறு டாக்டர் ஜெயதேவா ஊர்ப் பெரியவர்களிடம் கூறி யிருக்கிறாராம்.

## பஸ் மோதியதில் பெண் ஒருவர் பலி

தலவாக்கலையிலிருந்து - ராணிவத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் மோதி பெண் ஒருவர் பலியானார்.

நேற்றுமுன்தினம்மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் 60 வயது மதிக்கத் தக்க பெண் ஒரு வரே பலியானார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பஸ்ஸின் சாரதியை தலவாக்கலை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க - 12)


அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

801 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மீனம் 01 04 17 27

01-08-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4424888 - 4440497

ஜக்பொட் பரிசு ரூபா.2,497,950/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 344,338 | 10/- | 3,443,380/- |
| 2 இலக்கங்கள் | 31,655 | 20/- | 633,100/- |
| 1- இல. + லக்கினம் | 31,453 | 30/- | 943,590/- |
| 2 இல. + லக்கினம் | 2,847 | 100/- | 284,700/- |
| 3 இலக்கங்கள் | 822 | 500/- | 411,000/- |
| 3 இல. + லக்கினம் | 95 | 5,000/- | 475,000/- |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,497,950/- | - |
| மொத்தம் | | | 6,590,770/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 411,219 | | 7,614,270/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,267,200/-

தொடர் இல.5320598 க்கு மேற்பட்ட சிறப்பு நிற டிக்கட்டுக்கள் 2006 ஆகஸ்ட் 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33. சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| நுவரெலியா | 4435310-9-73 |
| கம்பஹா | 4435188-8-81 |
| இரத்தினபுரி | 4430927-7-54 |
| மாத்தறை | 4426760-7-68 |
| அனுராதபுரம் | 4439847-8-93 |



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,இலங்கை
விளையாட்டு விஞ்ஞான அலகு
DIPLOMA IN PHYSICAL EDUCATION

2005/2006 கல்வியாண்டுக்கான இரண்டாம் வருட உடற்கல்வி டிப்ளோமா (7ஆம் அணி) மாணவர்களுக்கான கல்விசார் நடவடிக்கைகள் 14.08.2006 அன்று ஆரம்பமாகின்றன. மாணவர்கள் காலை 7 மணிக்கு பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் உரிய கோல உடையுடன் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.

-பதிவாளர்.
2006.08.02 (சி-50630)


## வவுனியா கல்விக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா

வவுனியா,ஓக.3

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கடந்த 2000, 2001, 2002, 2003 ஆகிய கல்வியாண்களில் கல்வி பயின்று வெளியேறிய ஆசிரியர்களுக்கு பட்டம்அளிப்பு விழா நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஒன்பதாம், பத்தாம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கல்வியாண்டுகளில் கல்வி கற்ற மாணவர்கள், இப் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ளவுள்ளோர் எதிர்வரும் ஏழாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (3-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகளின் படுகொலைகளைக் கண்டித்து அமெரிக்காவில் திரண்ட ஈழத்தமிழர்கள்






தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் அரச பயங்கரவாத நடவடிக்கைகளைக் கண்டித்து அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் உள்ள காங்கிரஸ் சபைக்கு முன்பாக கடந்த திங்கட்கிழமை அமைதிப் பேரணி ஒன்று நடைபெற்றது. பேரணியில் கலந்து கொண்டோரை முதல் இரு படங்களிலும் ஈழத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதத்தை சித்தரிக்கும் காட்சிகளை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

# வவுனியாவில் ஒரே நாளில் ஒன்பது வீடுகளில் கொள்ளை

### கொள்ளையரின் சூட்டுக்கு இலக்காகி பெண் ஒருவரும் மரணம்

வவுனியா, ஓக.3

வவுனியாவில் ஒரே நாளில் ஒன்பது வீடுகளில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கொள்ளைச் சம்பவங்களில் பெண் ஒருவர் உயிரிழந்தார். மற்றும் இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தனர்.

இலுப்பைக்குளம், கோயில்குளம், வெளிக்குளம் ஆகிய இடங்களில் உள்ள வீடுகளிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கறுப்புநிற முகமூடி அணிந்து ஆயுதங்களுடன் வந்த கொள்ளையர்களே இந்த வீடுகளில் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

வவுனியா தெற்கு இலுப்பைக்குளத்தில் வீட்டில் கொள்ளையடித்து விட்டு ஓடிய நபர்களை வீட்டிலிருந்தவர்கள் கலைத்துச் சென்றனர் என்றும் -

கொள்ளையர்கள் அவர்கள் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தியாகராசா கனகஜோதிமணி (வயது 35) என்பவர் உயிரிழந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அவரது கணவரான ராஜமணி தியாகராஜா (வயது 42), அவரது உறவினரான சிவலிங்கம் கேதீஸ்வரன் ஆகியோர் சூட்டுக் காயங்களுடன் வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-1)

## மூதூரில் காயமுற்றோருக்கு உதவ முஸ்லிம் காங்கிரஸ் நடவடிக்கை

கொழும்பு, ஓக.3

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரச படையினருக்கும் இடையில் மூதூரில் இடம்பெற்று வரும் தாக்குதலில் சிக்கிக் காயமடைந்த பொது மக்களுக்கான வைத்திய வசதிகளையும், தேவைப்படும் ஏனைய உதவிகளையும் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீடம் நேற்றுக் காலை அவசரமாகக் கூடி ஆராய்ந்தது.

கொழும்பில் உள்ள கட்சியின் தலைமையகமான தாருல்ஸலாமில் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமின் தலைமையில் பல மணி நேரமாக நடைபெற்ற இக்கலந்துரையாடலில் கட்சியின் உறுப்பினர்களும், முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

உயர்பீடம் கூடுவதற்கு முன் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவருடன் தொலைபேசி மூலம் உரையாடி மூதூர் பகுதி மக்களுக்குத் தேவையான வைத்திய வசதிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு கூறினார். (த-2)

## பலாலி படைத் தலைமையகத்தின்.....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைக்குண்டு, மனித அழிவுக் குண்டு ஒன்றுக்கு தலா - இரண்டாயிரம் ரூபாவும், கைத்துப்பாக்கி (பிஸ்ரல்), கிளைமோர்க் குண்டு, மிதி வெடி ஒன்றுக்கு தலா - பத்தாயிரம் ரூபாவும், ரி-56 ரக துப்பாக்கி, ஆர்.பி.ஜி குண்டு செலுத்தி ஒன்றுக்கு தலா - பதினைந்தாயிரம் ரூபாவும், தற்கொலையாளி பயன்படுத்தும் அங்கி ஒன்றுக்கு ஐம்பது ஆயிரம் ரூபாவும், ஆர்.பி.ஜி. குண்டுக்கு 5ஆயிரம் ரூபாவும் அதிக பலமுள்ள இயந்திரத் துப்பாக்கி ஒன்றுக்கு - முப்பதாயிரம் ரூபாவும் வழங்கப் படும்.

மேற்படி ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகள், வெடிமருந்துகள் சம்பந்தப்பட்ட தகவல்களை 0773228382 அல்லது 0773148399 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கோ அல்லது அண்மையில் உள்ள பொலீஸ், இராணுவ முகாமில் தெரிவித்துப் பணப்பரிசிலைப் பெற்றுக் கொள்ளலாம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, படையினரின் இந்த அறிவித்தல் தொடர்பான படங்கள் கொண்ட பிரசுரங்கள் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் உள்ள படைமுகாம்கள், முக்கிய சந்திகளில் ஒட்டப்பட்டுள்ளன.

**PERSONAL CLASSES**
364, Stanly Rd, Jaffna.
G.A.Q, B.A.- I, B.A.-FINAL
யாழ்ப்பாணம் - பேராதனை
வகுப்புகள் நடைபெறுகின்றன
G.A.Q பேராதனை- 2007
G.A.Q - ENGLISH - 2006
ஆரம்பம்: 05.08.2006
காலை 8 மணி
(8.00 - 5.00 வரை)
தமிழ்: திரு. தர்மராஜா
ENGLISH: MR.MAHESWARAN

**A/L 2007& 08**
CHRIS - Mrs.A.மல்லிகா
TAM - Mr.சிவா
LOG - Mr.R.றமணன்
DRAMA, HINDU.C - மயூரன்
ECON, ENG, GEO
நடைபெறுகின்றன.
Gr. 1 முதல் O/L வரை
Gr 6 & 7 Eng.Med
SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஜெயம்ரவி, திரிஷா, தேஜாஸ்ரீ, ரிச்சாட்பட்டேல்
சம்திங் சம்திங்
உனக்கும் எனக்கும்
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும் -
ரிக்கட் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(கி-47139)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்
அர்ஜூன், சினேகா, கபாலி நடித்த
சின்னா (அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க)
காட்சி நேரம் : 10.30, 2.30
(கி-49188)

# மரண அறிவித்தல்

## சன்னாசி ரவிச்சந்திரன்

### (ரவி) பதுளை



அன்னார் மோகனாம்பாளின் (ராதா-கோவளம், காரைநகர்) அன்புக் கணவரும், சன்னாசி கனகம்மாவின் அன்பு மகனும், அரிச்சந்திரன் கமலாதேவியின் அன்பு மருமகனும், காந்திமதி, கலைச்செல்வி, ராஜகுமாரி, புவனேஸ்வரி, லச்சுமி (பதுளை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுப்பிரமணியம், செல்வராஜ், துரைச்சாமி, யோகராஜ், சுந்தராம்பாள் (குஞ்சு), சத்தியா, கீதா, கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2006) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
[illegible] வீதி,
ஓட்டுமடம்.

தகவல்:
ராதா (மனைவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கனகசபை முருகேசு (பத்தர்)

### (பருத்தித்துறை ராணி ஆபரண மாளிகை)



புலோலி கிழக்கு, பருத்தித்துறையைச் சேர்ந்த கனகசபை முருகேசு 01.08.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்புக் கணவரும், சிவகங்கை, சோதிலிங்கம், மரகதாம்பாள், ஆனந்தராணி (இந்தியா), ஸ்ரீரஞ்சன் (ஜேர்மனி), யமுனா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசரத்தினம் (கல்பனா நகை மாளிகை- பருத்தித்துறை), சாரதாம்பாள், சிதம்பரநாதன், வேலுப்பிள்ளை (இந்தியா), தேவகி (ஜேர்மனி), தெய்வேந்திரம் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (03.08.2006) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்

152, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

*தகவல்:*
சோதிலிங்கம் (மகன்)

## அம்பலவாணர் தருமலிங்கம்



சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் தருமலிங்கம் அவர்கள் நேற்று (02.08.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சின்னாச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், சுசிலாதேவி, பூலோகராசா (பிரான்ஸ்), வடிவேலு (பிரான்ஸ்), இராமச்சந்திரன் (பிரான்ஸ்), ஸ்ரீரங்கன் (பிரான்ஸ்), தங்கமலர் (பிரான்ஸ்), விசாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திரராசா, நாகரஞ்சினி (பிரான்ஸ்), சசிகலா (பிரான்ஸ்), ஆர்த்திகா (பிரான்ஸ்), ஜெகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும், அமரர் செல்லத்துரை, சிவகாமன், செல்லம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

(52902)

# 850 படையினருடன் கடலில் நிற்கும் கப்பலுக்கு இந்தியா உதவக்கூடாது!

## மன்மோகன் சிங்கிற்கு வைகோ அவசர கடிதம்

திருகோணமலை, ஓக. 03

திருகோணமலைக் கடற்பரப்பில் 850 இராணுவத்தினருடன் வந்துகொண்டிருந்த சமயம் விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள்ளான கப்பல் அந்த முற்றுகையிலிருந்து தப்பித்து சர்வதேச கடற்பரப்புக்குள் நுழைந்து இப்போதும் சர்வதேச கடற்பரப்பிலேயே தத்தளிக்கின்றது. அதனை பாதுகாப்பாக மீட்பதற்கு இந்தியா எந்த வகையிலும் உதவக்கூடாது என்று இந்திய மத்திய அரசிடம் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி வலியுறுத்தியிருக்கிறார்.

இலங்கையில் நிலவும் போர் நிறுத்த உடன்பாடுகளை மீறி தமிழ் மக்கள் மீது விமானங்கள் மூலமாகவும், எறிகணைகள் மூலமாகவும் தாக்குதல் நடத்தி வன்செயலில் ஈடுபட்டு அப்பாவித் தமிழர்களைக் கொன்றுவருகின்ற இலங்கைப் படைகள், தமிழ் மக்கள் மீதான மற்றொரு போர் நடவடிக்கைக்காகவே ஆயுதம் தாங்கிய கடற்படையினர் 850 பேரை ஏற்றிவந்தது. எனவே அந்தப் படைகளை மீட்கும் உதவிகள் எவற்றையும் இந்திய அரசு செய்யக்கூடாது என்று வைகோ சுட்டிக்காட்டியிருக்கிறார். இது தொடர்பாக அவர் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்திருக்கின்றார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கைத் தீவில் போர் மேகங்கள் சூழ்ந்துள்ளன. போர் நிறுத்த ஒப்பந்தத்தை திட்டமிட்டே மீறி உள்ள இலங்கை இனவாத சிங்கள அரசு, தமிழர்கள் மீது தனது இனக்கொலைத் தாக்குதலை தீவிரப்படுத்த முப்படைகளையும் ஏவியுள்ளது. பெண்கள், குழந்தைகள் உட்பட அப்பாவித் தமிழர்கள் குண்டுவீச்சால் கொல்லப்படுகின்றனர்.

தமிழர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவக்கூடாது என்றும், தாக்குதல் நடத்தக்கூடாது என்றும் விடுதலைப் புலிகள் தொடர்ந்து செய்த எச்சரிக்கையை மீறி இலங்கை அரசு பீரங்கித் தாக்குதலையும், குண்டுவீச்சையும் தொடர்ந்து நடத்துவதால் தமிழர் பகுதிகளையும், தமிழ் மக்களையும் பாதுகாக்க விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் நடத்துகின்றனர். தமிழர்கள் மீது அறிவிக்கப்படாத யுத்தத்தை இலங்கை அரசு தொடுத்துவிட்டது.

இந்தச் சூழ்நிலையில் இலங்கை காவல் துறையைச் சேர்ந்த 44 பேருக்கு தமிழ் நாட்டில் கோவையில் மத்திய பாதுகாப்பு காவல் துறை தளத்தில் இந்தியா பயிற்சி கொடுக்கின்ற செய்தி அதிர்ச்சி ஊட்டுகின்றது. உடனடியாக இந்தப் பயிற்சி நிறுத்தப்பட்டு சிங்களப்பொலிஸாரை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பன்னாட்டு ஊடகங்களின் வாயிலாக கிடைத்துள்ள நம்பகரமான தகவல்களின்படி தமிழர் பகுதிகளில் தாக்குதல் நடத்துவதற்காக 854 ஆயுதந்தாங்கிய சிங்களத் துருப்புக்களை ஏற்றிக்கொண்டு இலங்கை கடற்படைக் கப்பல் சென்றிருக்கிறது என்ற செய்தியை நான் அறிகிறேன்.

அத்துடன் சம்பந்தப்பட்ட இலங்கைக் கப்பலுக்கு பாதுகாப்புக் கொடுக்கவும், உதவி செய்யவும் இந்தியக் கடற்படையின் உதவியை நாடி இலங்கை அதிபர் ராஜபக்ஷ இந்தியப் பிரதமரிடம் பேசினார் என்ற செய்தி வெளியாகியுள்ளது.

அப்படி ஏதாவது உதவியை இந்தியா இலங்கைக்குச் செய்ய முற்பட்டால் அது மன்னிக்க முடியாத அக்கிரமமான செயல் ஆகும். தமிழர்களுக்கு எதிரான இலங்கையின் இராணுவ நடவடிக்கைக்குத் துணைபோகும் காரியமாகவே முடியும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

### கிழக்கில் படையினர் மீது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீதும், மாவிலாறு பகுதியில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடும் துருப்பினருக்கான விநியோகப் பாதை மீதுமே தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின் றன.

மூதூரிலிருந்து மாவிலாறுவரையான - ஏ-15 நெடுஞ்சாலையில் அமைந்துள்ள - படை முகாம்கள் மீதே நேற்று புதன்கிழமை தாக்குதல்கள் நடத்தப்பட்டன. மாவிலாறு பகுதியில் படைநகர்வில் ஈடுபட்டிருக்கும் துருப்பினருக்கான விநியோகங்களைத் துண்டிப்பதே இதன் நோக்கம் - என்றும் இளந்திரையன் மேலும் தெரிவித்திருக்கிறார்.

**புல்மோட்டைச் சமர்**

இதேவேளை - செவ்வாயன்று மாலையிலும் அன்று இரவு தாண்டி மறுநாளான நேற்று அதிகாலை வரையிலும் புல்மோட்டைக் கடற்பரப்பில் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்றிருக்கின்றன என்பதையும் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

செவ்வாயன்று மாலை 5.30 மணிமுதல் 7 மணிவரையும் பின்னர் இரவு 9 மணிமுதல் நேற்று அதிகாலை 3.30 மணிவரையும் இடம்பெற்ற கடற்சமரில் கடற்படையின் 'டோறா' அதிவேக தாக்குதல் படகுகள் இரண்டு சேதமாக்கப்பட்டன என்றும் - மற்றொரு டோறா படகு சிறு சேதங்களுக்குள்ளானது என்றும் - அவர் தெரிவித்தார்.

திருகோணமலைக்கான கடற்படையின் விநியோகப் பாதையை குழப்புவதே இந்த தற்காப்புத் தாக்குதலின் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

### மூதூர் மோதலில் சிக்கி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது.

மூதூர் பகுதியில் லதீப் (வயது 24 - வாகன சாரதி), பாஸித் (வயது 20) ஆகிய இரு இளைஞர்களும், எறும்பப்பா என்று அழைக்கப்படும் 70 வயது வயோதிபரும் உயிரிழந்திருக்கின்றனர். இவர்களில் வயோதிபர் ஷெல் வெடித்த அதிர்ச்சியில் உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது.

மூதூரில் இருபத்தைந்திற்கும் அதிகமானோர் காயமடைந்திருக்கின்றனர். பல வீடுகள் ஷெல்களினால் சேதமடைந்திருக்கின்றன.

நேற்று அதிகாலை கடும் மோதல் வெடித்துமே மூதூர் மக்கள் மத்ராஸா, பெரியபள்ளிவாசல் மற்றும் வணக்க ஸ்தலங்களில் தஞ்சம் புகுந்தனர். அதனால் இழப்புகள், இடையில் சிக்கிக் காயமடைதல் போன்ற பாதிப்புகள் பெருமளவில் குறைந்தன.

மோதல் வெடிக்க முன்னரே நகரப் பகுதி மக்களை பள்ளிவாசல் போன்ற இடங்களில் தஞ்சம் புகுந்து கொள்ளும்படியான முன்னறிவித்தல் தகவல்களை அவர்களுக்குப் புலிகள் விடுத்திருந்தனர் என்றும் கூறப்பட்டது.

தோப்பூரில் படைமுகாமுக்கு அருகில் வசித்த ஹிதாயதுல்லா என்பவர் ஷெல் தாக்குதலில் உயிரிழந்தார். அப்பிரதேசத்தில் பத்துப் பேர்வரை காயமடைந்தனர்.

மூதூர் வைத்தியசாலையும் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. அங்குள்ள மகப்பேற்று சிகிச்சைப் பிரிவில் ஷெல் வீழ்ந்து வெடித்துள்ளது. சிலர் காயமடைந்துள்ளனர்.

மூதூர் நகரின் சில பகுதிகளில் உயிரிழந்த புலிகள் இயக்கப் போராளிகளின் சடலங்கள் காணப்படுவதாக நேற்றுக் காலை கிடைத்த செய்தி ஒன்று தெரிவித்தது.

இறால்குழிப் பகுதி மீது படையினர் நடத்திய விமான, ஷெல் தாக்குதல்களிலும் பெரும் சேதம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

மூதூரில் அரச கட்டுப்பாட்டிலிருந்த பல இடங்களில் இப்போது புலிகள் நடமாடுகின்றனர். அங்கு புலிகளுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் சினேகபூர்வமான நல்லுறவு காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

"முஸ்லிம் மக்களுடன் நல்லுறவைப் பேணுவதில் மிக அவதானமாக இருக்கும்படி புலிகளின் போராளிகளுக்கு அவர்களது தலைமை கடுமையான உத்தரவு வழங்கியிருக்கக் கூடும். ஏனெனில், முஸ்லிம் மக்களின் மனம் நோகாமல் - கோணாமல் - செயற்படுவதில் அவர்கள் (புலிகள்) மிகுந்த சிரத்தையாக இருக்கின்றமையை எங்களால் அவதானிக்க முடிகின்றது.

"காயமடைந்த முஸ்லிம் மக்களுக்கு மருந்து கட்டிவிடுவதிலும், முதலுதவி சிகிச்சை அளிப்பதிலும் அவர்கள் மும்முரமாக ஈடுபட்டிருப்பதையும் காணமுடிந்தது.

"எனவே, புலிகள் - முஸ்லிம்கள் முறுகல் நிலை மூதூரில் உருவாகும் வாய்ப்பு இல்லை" - இவ்வாறு மூதூரின் மூத்த பிரமுகர் ஒருவர் நேற்று உதயனுடன் தொலைபேசியில் உரையாடுகையில் கூறினார்.

நேற்று அப்பிரதேசத்தில் இடம்பெற்ற சண்டைகளின் போது அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பிலும் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் ஏதும் இச்செய்தி எழுதப்படும்வரை தெரியவரவில்லை. (உ)

### மோதலை உடனடியாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விநியோகத்தைத் திறந்துவிடுவது கட்டாயமானதாகும். இரு தரப்புகளினதும் படைகள் 2002 ஆம் ஆண்டின் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டவேளை இருந்த நிலைகளுக்கு கண்டிப்பாகத் திரும்பவேண்டும்.

கண்காணிப்புக் குழுவினரது எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக பேச்சுநடத்த நான் ஹன்ஸன் போவரை அனுப்பிவைத்துள்ளேன். டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, சுவீடன் மற்றும் நோர்வே நாட்டின் கண்காணிப்பாளர்கள் கஸ்ரமான காலங்களில் அரியசேவை புரிந்துள்ளனர். அவர்களது முயற்சிகள் இரண்டு தரப்பினரும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மதித்துப் பணியாற்றுவதற்கு வகை செய்வதாக அமைந்தனஎன்பதில் சந்தேகமில்லை" என எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார் என்று நோர்வே வெளிவிவகார அமைச்சின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நிலமை சீர்கெட்டுள்ள வேளையிலேயே பிரச்சினை அதிகமாகியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளை பயங்கரவாதக் குழுக்களின் பட்டியலில் இந்தவருட ஆரம்பத்தில் சேர்த்துக்கொண்டதிலிருந்து விடுதலைப் புலிகள் டென்மார்க், பின்லாந்து, சுவீடன் நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களுடன் ஒத்துழைக்க மறுத்துள்ளனர்.

விசேட தூதர் ஹன்ஸன் போவர் நீண்டகாலமாகத் திட்டமிடப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு இம்மாதம் 3ஆம் திகதி ஸ்ரீலங்காவிற்கு விஜயம் செய்கின்றார். இரண்டு தரப்புகளுடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மூதூர் புலிகள் வசம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் கடும் பீரங்கி, ஷெல் தாக்குதல்களோடு புலிகளின் பாய்ச்சல் ஆரம்பித்தது.

கட்டைப்பறிச்சான் முகாம் மற்றும் தோப்பூர் மினி முகாம் என்பன புலிகள் வசம் முதலில் வீழ்ந்தன. தோப்பூர் மகாவித்தியாலயத்துக்கு முன்னாலிருந்த பொலிஸ் தடை நிலையும் வீழ்ந்தது.

இதுவரை காலமும் கிழக்கு மூதூரில் நிலைகொண்டிருந்த புலிகள் மூதூர் நகருக்குள்ளும் பிரவேசித்தனர். அங்கு நேற்று அவர்களது ஆதிக்கம் நிலவியது.

எனினும், மூதூர் நகரின் சுற்றாடலில் படையினர் ஆங்காங்கே நிலை கொண்டிருக்கக்கூடும் எனக் கருதப்பட்டது.

மூதூர் இறங்குதுறை அமைந்துள்ள தாகாநகர், தக்வாநகர் என்பவற்றிலும் புலிகளின் போராளிகள் நடமாடுவதைக் காணமுடிந்தது.

மூதூர் பொலிஸ் நிலையமும் தாக்குதலுக்குள்ளானது. அங்கு பொலிஸார் தொடர்ந்து தங்கியுள்ளனரா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

புலிகளின் வசம் வீழ்ந்துள்ளதாகக் கூறப்படும் படையினரின் கட்டைப்பறிச்சான் முன்னரங்க பாதுகாப்பு அரண்முகாம், இதுவரை புலிகளின் சம்பூர்க் கட்டுப்பாட்டுப்பிரதேச முன்னரங்க நிலையிலிருந்து சுமார் 800 மீற்றர் தொலைவிலேயே அமைந்திருந்தது. நேற்று அதிகாலை திடீர் நகர்வு மூலம் அந்த முகாமைத் தாண்டிய புலிகள், படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மேலும் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம்வரை முன்னேறி மூதூர் நகருக்குள் பிரவேசித்தனர் என்று கூறப்படுகின்றது.

மினி முகாம்களை வரிசையாக வீழ்த்திய புலிகள் மஹிந்தபுர முகாம் வரை முன்னேறினர் என்றும் -

மஹிந்தபுரவில் சண்டை இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புலிகளுடன் மாவிலாற்றுப் பகுதியில் மோதும் படையினருக்கு பின்வழங்கல் - விநியோக மையமாக இருந்த பிரதேசத்தில் அமைந்திருந்த படைமுகாம்களே இப்போது புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டிருக்கின்றன.

எனினும் -

கட்டைப்பறிச்சான் முகாமை வீழ்த்தி, மூதூர் நகரம்வரை புலிகள் முன்னேறியிருக்கின்றனர் என்றும் -

காந்திநகர், பாலத்தோப்பூர் போன்ற பகுதிகளும் புலிகள் வசம் வீழ்ந்துள்ளன என்றும்-

தமிழர் தரப்பில் வெளியான தகவல்களை பாதுகாப்புப் படை வட்டாரங்கள் நேற்று அடியோடு மறுத்திருக்கின்றன.

### மூதூர் நகர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தமது இந்தக் கருத்தின் மூலம் புலிகள் மூதூரை கைப்பற்றினர் என்பதை மறைமுகமாக ஒப்புக்கொள்கிறார் என்று கருதமுடிகின்றது.

"மூதூரில் பொதுமக்கள் நிறைந்த பகுதி மற்றும் வீடுகளில் இருந்து புலிகள் தாக்குதல்களை நடத்துவதால் படையினரால் உடனடியாக பதில் தாக்குதல்களை மேற்கொள்ள முடியாதுள்ளது. இருந்தும் இன்று (நேற்று) மாலைக்குள் மூதூரிலிருந்து புலிகளை விரட்டியடித்து படையினர் மூதூரை தமது முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விடுவர்" - என்றார்.

"ஊடகங்களில் தெரிவிக்கப்படுவதுபோல மூதூரில் நிலைமை அவ்வளவு மோசமானதாக இல்லை" என்றும் அமைச்சர் ரம்புக்வெல சொன்னார். (க)

### சுன்னாகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளை வானொன்றில் வந்த ஆயுததாரிகளே படையினர் மீது வேட்டுக்களைத் தீர்த்துவிட்டுத் தப்பிச் சென்றனர் என்றும் - இதில் படையினர் தரப்பில் நால்வர் படுகாயமடைந்தனர் என்றும் இணையத்தளங்கள் நேற்றிரவு செய்தி வெளியிட்டிருந்தன. எனினும், இதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

இதேவேளை, இந்தச் சம்பவத்தையடுத்து சங்கானை, சங்கரத்தை மற்றும் அராலிப்பகுதிகளில் நேற்றுமாலை மோட்டார் சைக்கிள்களில் வந்திறங்கிய படையினர் வீதிகளில் சென்றோரைப் பலத்த சோதனைக்குட்படுத்தினர் என்றும் - சங்கானைப் பகுதியைச் சேர்ந்த மோட்டார் சைக்கிள் மெக்கானிக் ஒருவரைத் தம்முடன் அழைத்துச் சென்றனர் என்றும் செய்திகள் தெரிவித்தன.

(எ-1-29-15-86)

### நாவலர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இவரை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்தவர்கள் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகக் கூறப்பட்டது. துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவர் ஐங்கரன் இசைக்குழுவின் உறுப்பினர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். மேலதிக நீதிவான் திருமதி.ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணை நடத்தியதுடன் இளைஞரின் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கண்காணிப்புக் குழுவினர்களும் வருகை தந்து நிலைமையினை அவதானித்துச் சென்றனர்.

(எ-13-15-78-86-167-190-203)


விமானப் பயணச் சீட்டு

* முன்கூட்டிய பதிவுகளுக்கு சலுகைக் கட்டணம்
* யாழ்.கொழும்பு துரித தபால் மற்றும் ஆவண சேவை




இல.32, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3916, 0777 517019, 0777 801038



புலமைப்பரீட்சை ★ இசைவகுப்பு

* பிரபல ஆசான் கே.ரீ.அம்பிகைபாகனின் புலமைப்பரிசில் (எதிர்பார்க்கை) விசேட மாதிரி வினாத்தாளும் - பரீட்சையும் தவறவிடாதீர்கள்.

* வடஇலங்கை சங்கீத சபைப் பரீட்சைக்குரிய பயிற்சி வகுப்புகள்.

பிரிவு 2

ஆரம்பம் : 05.08.2006 சனி 7.30 a.m

கற்சுமி - நாவலர் வீதி - யாழ்.



பரீட்சை வினாத்தாள்

தரம் 1 முதல் O/L வரை

2ஆம் தவணைக்கான வினாத்தாள் பெற்றுக் கொள்ளலாம்.

நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.08.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org